# இயேசுவே வாரும்

ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும். வெளி. 22:20

*காலேப் யோசுவா*
☎ 044 - 26490183. Cell :9444701953

*4/130, காந்தி தெரு, சென்னீர்குப்பம்,*
*பூந்தமல்லி, சென்னை - 600 056.*

***கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்தஆவியினுடைய ஐக்கியமும், உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென். (2 கொரி. 13 : 14)***

**2 கொரி. 13 : 14 குறித்து Rev. S. பன்னீர்செல்வம் அவர்களின் போதனைகள் :**

**அ. இது ஆரோனின் ஆசீர்வாதம்.**

**ஆ. இதில் திரித்துவம் என்ற மேலான தெய்வீகத்தத்துவம் அடங்கியுள்ளது.**

**இ. இதில் பிதா, குமாரன், பரிசுத்த ஆவி - இந்த மூன்று பேர்களைக் கொண்ட திரியேக தேவனின் ஒட்டுமொத்த ஆசீர்வாதங்கள் அடங்கியுள்ளது.**

**மேற்கண்ட திரித்துவ ஞானம் பரத்திலிருந்து இறங்கி வருகிற ஞானமாயிராமல் லௌகிக சம்பந்தமானதும், ஜென்மசுபாவத்துக்குரியதும், பேய்த்தனத்துக்கடுத்ததுமாயிருக்கிறது.**
**சகோ. காலேப் யோசுவா**

1. கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காக கர்த்தரால் சுவிசேஷகனாக ஏற்படுத்தப்பட்டவனாகிய காலேப் யோசுவா தேவனுடைய சபைக்கும் எல்லாப் பரிசுத்தவான்களுக்கும் எழுதுகிறதாவது :
நம்முடைய பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

2. டாக்டர். புஷ்பராஜ் அவர்களின் 2009 ஏப்ரல் மாத **ஜாமக்காரனில் ஆராதனையின் இறுதி ஆசீர்வாதம்** என்ற தலைப்புடன் **சத்திய வார்த்தை** என Rev. S. பன்னீர் செல்வம் அவர்கள் எழுதியது பிரசுரிக்கப்பட்டிருந்தது. அது சத்திய வார்த்தை அல்ல, மாறாக அது பரத்திலிருந்து இறங்கி வராத இப்பிரபஞ்சத்திற்குரிய லௌகிக சம்பந்தமான ஞானம் என்பதை உங்களுக்கு தெளிவுப்படுத்துவதே இந்தச் செய்தி தொகுப்பின் நோக்கம்.

3. Rev. S. பன்னீர் செல்வம் அவர்கள் 2 கொரி 13 : 14 ஐ கொண்டு போதிப்பது என்ன?

**அ.** 2 கொரி 13 : 14 ல் பழைய ஏற்பாடு ஆரோனின் ஆசீர்வாதம் அடங்கியுள்ளது என்கிறார். சகோதரர் இங்கு ஆரோனின் ஆசீர்வாதம் என எண் 6 : 22-27 வசனங்களை குறிப்பிடுகிறார் என நான் கருதுகிறேன்.
**ஆ.** பழைய ஏற்பாட்டின் ஆரோன் புதிய ஏற்பாட்டில் சபையின் போதகர் என்கிறார். இவர் மகா வேசி மற்றும் அவளுடைய குமாரத்திகள் என வெளிப்படுத்தின விசேஷத்தில் கூறப்படும் (வெளி 17 : 1,5) திரித்துவ ஸ்தாபன சபைகளை மற்றும் அதன் போதகர்களை குறிப்பிடுகிறார் என நான் யுகிக்கிறேன்.
**இ.** மூன்றாவதாக 2 கொரி 13 : 14 ல் கூறப்பட்டுள்ள ஆசீர்வாதத்தில் திரித்துவம் என்ற மேலான தெய்வீக தத்துவம் அடங்கியிருக்கிறது. பிதா, குமாரன், பரிசுத்த ஆவி - இந்த மூன்று தெய்வீகத்தத்துவங்களும் ஒன்று சேர்ந்து சபையாரை ஆசீர்வதிக்கிறார்கள் என்கிறார். அதாவது திரித்துவத்தில் இரண்டாவது நபரும், குமாரனுமாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் அவருடைய கிருபை நமக்கு வாக்களிக்கப்பட்டுள்ளது என்கிறார். அடுத்து திரித்துவத்தின் முதல் நபராகிய பிதாவாகிய தேவனுடைய அன்பு நம்மோடு தங்கி, தாபரிக்கும்படியாக நம்மோடு வருகிறது என்கிறார். மூன்றாவதாக திரித்துவத்தின் மூன்றாவது நபராகிய பரிசுத்த ஆவியானவரின் பாதுகாப்பும், பராமரிப்பும், ஐக்கியமும் நம்மோடு தங்கியிருக்கிறது என போதிக்கிறார்.

4. மேலும் சகோதரர் தன்னுடைய / அவர் சார்ந்திருக்கும் ஸ்தாபனசபையினுடைய திரித்துவம் உபதேசம் குறித்து கீழ்கண்டவாறு எழுதுகிறார். பிதா, குமாரன், பரிசுத்த ஆவி - இந்த மூவரும் மூன்றில் ஒன்றாக, ஒன்றில் மூன்றாக தனித்தனியாவும், அதே சமயம் ஒன்றாகவும் தங்கியிருக்கும் தத்தவத்திற்கு கட்டுப்பட்டவர்கள். பிதா, குமாரன், பரிசுத்த ஆவி - இந்த மூவரும் தனித்தனி தன்மையுள்ளவர்கள். ஆனால் மூவரும் ஒன்றாக இருப்பவர்கள். ஆனாலும் பிதாவானவர் வேறு, குமாரன் வேறு, பரிசுத்த ஆவி வேறு. இருந்தபோதிலும் மூவரும்

ஒன்று தான் என்கிறார்.

5. திருத்துவம் - பிதா, குமாரன், பரிசுத்த ஆவி - இந்த மூன்றும் வித்தியாசமான தேவத்துவங்கள். ஆனாலும் ஒருவரை ஒருவர் சார்ந்தவர்கள். They are independent but interdependent. ஒருவர் இல்லாமல் இன்னொருவர் செயல்பட முடியாது. ஆனால் மூவரும் முற்றிலும் வித்தியாசமானவர்கள். இப்படி தெய்வீகம் மூன்று நிலைகளிலிருந்து செயல்படுவதைத்தான் **திரித்துவம்** என்று வேதம் விளக்குகிறது என்று வியாக்கியானம் பண்ணுகிறார். ஆனால் சகோதரர் தேவஆவியினால், அதாவது பரிசுத்த ஆவியினால் அருளப்பட்ட வேதவாக்கியங்களில் அவருடைய போதனைக்கு எங்கு ஆதாரங்கள் உள்ளன என எடுத்துக்காட்ட முன்வரவில்லை.

6. மேலும் இந்த திரியேக தேவனாகிய பிதா, குமாரன், பரிசுத்த ஆவியாகிய மூவரும் நமது நாட்டின் பாதுகாப்பிற்காக முப்படைகள் Army, Air Force, Navy இருப்பது போன்று, தரைவழியாக நம்மை பாதுகாக்க Army ஆக (சகோதரர் உபதேசத்தின் படி இது **பிதா** என நினைக்கிறேன்) அடுத்து வான்வழியாக வரும் ஆபத்துகளிலிருந்து நம்மை Air Force ஆக (அதாவது **குமாரன்** என சகோதரர் உபதேசத்தைக்கொண்டு யூகிக்கிறேன்) மேலும் கடல் வழியாக வரும் ஆபத்துகளிலிருந்து நம்மை பாதுகாக்க Navy ஆக (இது **பரிசுத்த ஆவி** என சகோதரர் போதனையிலிருந்து கருதுகிறேன்) இந்த மூன்று தெய்வத்துவங்களும் நமக்கு பாதுகாப்புகளை அவ்வப்போது அளிக்கிறார்கள் என தன் உள்ளத்தின் ஆழத்திலிருந்து தனக்கு உரிமையுள்ள தன் கருத்தை வெளியிடுகிறார்.

7. Rev. S. பன்னீர் செல்வம் அவர்கள் தன் உபதேசத்தை இத்துடன் விட்டுவிடாது மேலும் சில கேள்விகளை எழுப்பி, அதற்கு பதிலும் கொடுக்கிறார்கள். அதாவது :
**கேள்வி :** 1. நாம் ஒரே கடவுள் தத்துவத்தை நம்புவோமானால் அந்த ஒரே கடவுளாகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டு கல்லறையில் மூன்று நாட்கள் இருந்ததால் அந்த மூன்று நாட்களும் இந்த Universe ஐ அதாவது இந்த அண்ட சராசரத்தை யார் கண்காணித்தது?
2. இயேசு கிறிஸ்து மாத்திரம் கடவுள் என்றால் இவர் பலியிடப்பட்ட பின்பு அந்த பலியை யார் ஏற்றுக்கொண்டது?
3. அந்த பலியை அங்கீகரித்தது யார்?

8. **கேள்வியும் அவருடையது, பதிலும் அவருடையதே.**
**பதில் :** இயேசு மனுக்குலத்தின் பாவத்திற்காக, பாவபரிகாரமாக தனது உயிரை தானாகவே கொடுக்க முன்வந்தார். குமாரனாகிய கடவுள் சிலுவையில் அறையப்பட்டபோது பிதாவாகிய கடவுள் அந்த பலியை சுகந்த வாசனையாக ஏற்றுக்கொண்டார். பாவமன்னிப்பை நமக்கு அருளினார். பிதாவாகிய கடவுள் இந்த அண்ட சராசரத்தின் மேல் அவருடைய ஆளுகை செய்யும் அதிகாரம் ஒரு அங்குலம் கூட குறையவில்லை என்கிறார்.

9. மேலும் பிதாவும், பரிசுத்த ஆவியும் இவர் மீது கோபப்படுகிறார்களாம். எதற்கு? Rev. S. பன்னீர் செல்வம் அவர்கள் மற்றவர்களுக்கு கடிதங்கள் எழுதும்போது இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் வாழ்த்துக்கள் என்று மாத்திரம் எழுவது வழக்கமாம். ஆனால் அப்படி எழுதும் போது அவருக்குள் உள்ளூர ஒரு சிறு ஆன்மீக உறுத்துதல், சத்தம் கேட்காத ஒரு சலனமும், சங்கடமும் ஏற்படுமாம். அதாவது இயேசு கிறிஸ்துவை மாத்திரம் வாழ்த்துதலில் குறிப்பிடுகிறாயே எங்கள் பேரை விட்டுவிட்டாயே என பிதாவும், பரிசுத்த ஆவியும் இவர் மீது கோபம் கொள்வது போன்ற ஒரு சலனமும், சங்கடமும் இவருக்குள் ஏற்படுகிறதாம்.

10. இவருடைய கருத்துகளுக்கும், கோட்பாடுகளுக்கும், கொள்கைகளுக்கும், போதனைகளுக்கும், உபதேசங்களுக்கும் **ஜாமக்காரன்** பத்திரிகை ஆசிரியர் டாக்டர். புஷ்பராஜ் அவர்கள் உடந்தை. ஏனென்றால் இது அவரது பத்திரிக்கையில் வெளிவந்துள்ளது. டாக்டர். புஷ்பராஜ் அவர்கள் **ஜாமக்காரனில்** இனி வேதவாக்கியங்களுக்கடுத்த போதனைகளை, உபதேசங்களை வெளியிடாமல் திரித்துவ ஸ்தாபனசபை மற்றும் அதன் ஊழியக்காரர்களின் பகல் கொள்ளைகளை பற்றி எழுதிக்கொண்டிருந்தால் அதுவே நலமாக இருக்கும் என ஒரு ஆலோசனையை அவர்களுக்கு கூறுவதில் மகிழ்ச்சி அடைகிறேன். வேதவாக்கியங்களுக்கடுத்த போதனைகளுக்கும், உபதேசங்களுக்கும் அவருக்கும் வெகுதூரம்.

11. இப்பொழுது நாம் Rev. S. பன்னீர் செல்வம் அவர்களின் போதனை / உபதேசம் வேதவாக்கியங்களிலிருந்து எந்த அளவுக்கு மாறுபட்டதாகவும், லௌகிக ஞானத்தோடு சம்பந்தப்பட்டதாகவும் காணப்படுகிறது என்பதை வேதவாக்கியங்களை கொண்டு தியானிப்போம்.

12. முதலாவது 2 கொரி 13 : 14 ஆரோனின் ஆசீர்வாதம் என கூறமுடியாது. எண் 6 வது அதி 22-27 வசனங்களில் கர்த்தர் மோசேயை நோக்கி : நீ ஆரோனிடமும் அவன் குமாரரிடமும் **என்** நாமத்தை இஸ்ரவேல் மேல் கூறி அவர்களை ஆசீர்வதிக்க சொல். அப்பொழுது **நான்** அவர்களை ஆசீர்வதிப்பேன் என்றார். அவருடைய நாமம் **கர்த்தர்** என காண்கிறோம். இங்கு கர்த்தர், **கர்த்தர்** என்பது **தம்முடைய** நாமம் **என்று** கூறுகிறாரேயன்றி **தங்களுடைய / எங்களுடைய** (மூவர்) நாமம் என கூறவில்லை. இங்கு கர்த்தருடைய நாமத்தினால் இஸ்ரவேல் ஜனங்களுக்கு **பாதுகாப்பு, கிருபை, சமாதானம்,** ஆசீர்வாதமாக கூறப்படுகிறது. மேலும் இங்கு கவனியுங்கள். ஆரோனும் அவன் குமாரரும் எண். 6 : 24, 25, 26 வசனங்களில் கூறப்பட்டுள்ள

பிரகாரமாக தான் ஜனங்களை ஆசீர்வதிக்க வேண்டும். அதனோடு ஒன்றை கூட்டவும், குறைக்கவும் கூடாது. கர்த்தர் கூறிய பிரகாரமாகவே அவர்கள் ஜனங்களை ஆசீர்வதிக்க வேண்டும். இங்கு ஆசீர்வாதத்திற்கு ஒரு மாதிரியை கர்த்தர் கற்றுக்கொடுக்கவில்லை. மாறாக இவ்வாறாகவே ஆசீர்வதிக்கவேண்டுமென்று கட்டளையிடுகிறார். ஆரோனும் அவன் குமாரனும் கர்த்தர் கூறிய பிரகாரமாக ஜனங்களை ஆசீர்வதிக்கும்போது தான் கர்த்தரும் தம்முடைய ஜனங்களை ஆசீர்வதிப்பார்.

13. மேலும் ஒரு சம்பவத்தை நீங்கள் புதிய ஏற்பாட்டில் காணலாம். மத் 6 அதிக்கு வருவீர்களானால் அங்கு கர்த்தர் தம்முடைய சீஷர்களுக்கு அவர்கள் எப்படி ஜெபிக்கவேண்டும் என கற்றுக்கொடுத்தார். அவர்கள் கர்த்தர் கற்றுக்கொடுத்த பிரகாரமாகவே ஜெபிக்க வேண்டும். இங்கும் கர்த்தர் தம்முடைய சீஷர்களுக்கு ஒரு மாதிரியாக கற்றுக்கொடுக்கவில்லை. மாறாக இப்படிதான் ஜெபிக்கவேண்டும் என கற்றுக்கொடுத்துள்ளார்.

14. பழைய ஏற்பாட்டில் கர்த்தர் தம்முடைய ஆசாரியர்கள் தம்முடைய ஜனங்களை அவருடைய நாமத்தினால் எப்படி ஆசீர்வதிக்க வேண்டுமென கட்டளையிட்டார். இங்கு புதிய ஏற்பாட்டில் அதே கர்த்தர் தம்முடைய சீஷர்கள் எப்படி ஜெபிக்கவேண்டுமென கற்றுக்கொடுத்தார்.

15. ஆனால் 2 கொரி 13 : 14 ல் அப். பவுல் கொரிந்து சபையாரை தனது இரண்டாவது நிருபத்தின் முடிவில் வாழ்த்தும் போது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபை, தேவனுடைய அன்பு, பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியம் அவர்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக என கூறி வாழ்த்துகிறான். இங்கு **கிருபை, அன்பு, ஐக்கியம்** ஆசீர்வாதத்தில் காணப்படுகிறது. இதிலிருந்து எண். 6 வது அதி ஆசீர்வாதமும், 2 கொரி 13 : 14 ல் கூறப்பட்ட ஆசீர்வாதமும் ஒன்றுக்கொன்று வித்தியாசமானது என்று தெரிக்கிறது. ஒரே ஆசீர்வாதமாக காணப்படவில்லை. இங்கு பாதுகாப்பு, கிருபை, சமாதானம். அங்கு கிருபை, அன்பு, ஐக்கியம் ஆசீர்வாதமாக கூறப்பட்டுள்ளது. மேலும் தேவனுடைய சபையில் அதன் உத்தியோகஸ்தர்கள் அனைவரும் அப். பவுலைப்போன்று தான் சபையாரை வாழ்த்தவேண்டும் என்ற கட்டளை எதுவும் இல்லை. பவுல் ஆவியானவருடைய வழிநடத்துதலின்படி கொரிந்து சபையாரை ஆசீர்வதித்தான். அதே போன்று சபை ஊழியர்கள் தங்கள் சபையாரை ஆவியானவருடைய வழிநடத்துதலின்படி ஆசீர்வதிக்கலாம். இதில் சபை ஊழியர்களுக்கு கட்டளை / பிரமாணம் எதுவும் கொடுக்கப்படவில்லை. அவர்கள் அப். பவுலைப்போன்று தான் ஆசீர்வதிக்கவேண்டும் என்ற நிர்ப்பந்தம் கிடையாது.

16. பொதுவாக அப். பவுல் சபைகளுக்கு நிருபங்கள் எழுதும் போது தொடக்கத்திலும், முடிவிலும் அவர்களை வாழ்த்துகிறான். பொதுவாக நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்வினாலும் உங்களுக்கு கிருபையும், சமாதானமும் உண்டாவதாக என தொடக்கத்தில் வாழ்த்துகிறான். ரோ. 1 : 3, 1கொரி 1 : 3 , 2 கொரி 1 : 2, கலா 1 : 3, எபே 1 : 2 , பிலி 1 : 2 , கொலோ 1 : 2, 1 தெச 1 : 1, 2 தெச 1 : 2, 1 தீமோ 1 : 2, 2 தீமோ 1 : 2, தீத் 1 : 2, பிலே : 3.

17. அடுத்து தனது அனைத்து நிருபங்களிலும் பவுல் அதன் முடிவில் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபை உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக என கூறி வாழ்த்துகிறான். ரோ. 16 : 24, 1 கொரி 16 : 23, கலா 6 : 18, எபே 6 : 24, பிலி 4 : 23, 1 தெச 5 : 28, 2 தெச 3 : 18, 2 தீமோ 4 : 22, பிலே : 25. அப். பவுல் கொரிந்து பட்டணத்தில் உள்ள தேவனுடைய சபையை தனது இரண்டாவது நிருபத்தில் வாழ்த்தும் போது மட்டும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபை, தேவனுடைய அன்பு, பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியம் உங்கள் அனைவரோடும் கூட இருப்பதாக என வாழ்த்துகிறான். 2 கொரி 13 : 14. பொதுவாக நிருபங்களின் தொடக்கமும் முடிவும் கிருபையை மையமாக கொண்ட வாழ்த்துதலாகவே இருக்கிறது. தேவனுடைய அன்பைக்கொண்டு, கிருபையினால் நாம் இரட்சிக்கப்பட்டதை குறித்து எபே 2 : 4-9 வசனங்களில் நாம் தியானிக்கலாம்.

18. அப். பவுல் தன் நிருபங்களின் ஆரம்பத்திலும், முடிவிலும் சபையாரை வாழ்த்தியதை மேலே வேத வாக்கியங்களின் அடிப்படையில் கண்டோம். இப்பொழுது நாம் அவனை இருத்துவக்காரன் (பிதாவாகிய தேவன் மற்றும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என தொடக்கத்தில் குறிப்பிடுவதால்) என்று கூறுவதா? அல்லது ஒருத்துவக்காரன் (கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை மட்டும் முடிவில் குறிப்பிடுவதால்) என கூறுவதா? Rev. S. பன்னீர்செல்வம் அவர்கள் பவுலை 2 கொரி 13 : 14 ல் அவன் கூறிய ஆசீர்வாதத்தைக் கொண்டு திரித்துவக்காரன் என கூறமுடியாது. ஏனென்றால் அவன் பிதாவாகிய தேவன் என்று கூறவில்லை. மாறாக தேவன் என்றே கூறியுள்ளான். நான் திரித்துவம் என்ற பிசாசின் உபதேசத்தில் உள்ள, அதன் ஊழியக்காரர்கள் பலர் அவர்கள் சபையாரை ஆசீர்வதிப்பதை கண்டிருக்கிறேன். அவர்கள் பிதாவாகிய தேவனுடைய அன்பு என்று கூறுவார்கள். அது அவர்கள் யார் என்பதை காட்டுகிறது. ஆனால் அப். பவுல் தேவனுடைய அன்பும் என்றே குறிப்பிடுகிறான். அத்துடன் **பிதாவாகிய** என்ற சொல்லை கூட்டுவது வேதவாக்கியங்களில் ஒன்றை கூட்டுவதாகும். எங்கு பிதாவாகிய தேவன் என்று கூறப்பட்டுள்ளதோ, அங்கு அதை அப்படியே கூறுவோம் தேவன் என்று கூறப்பட்டுள்ள இடங்களில் அதை அப்படியே உச்சரிப்போம்.

19. Rev. S. பன்னீர் செல்வம் அவர்கள் பிதாவையும், பரிசுத்த ஆவியையும் புறக்கணித்து கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் மட்டும் வாழ்த்துதல் கூறும் போது அவருக்குள் ஒரு சிறு ஆன்மீக உறுத்துதலும், சத்தம் கேட்காத ஒரு சலனமும், சங்கடமும் ஏற்படுவது உண்டு. அது போல அப். பவுல் பிதாவையும், கர்த்தராகிய

இயேசு கிறிஸ்துவையும் கூறி பரிசுத்த ஆவியானவரை விட்டுவிட்டபோதும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவையை மட்டும் கூறி பிதா மற்றும் பரிசுத்த ஆவியை மறந்த போதும் அவனுக்குள்ளும் Rev. S. பன்னீர் செல்வம் அவர்களிடம் காணப்பட்ட சலனமும், சங்கடமும், அவனுக்கும் ஏற்பட்டிருக்குமோ? நிச்சயமாக இருந்திருக்காது. ஏனென்றால் அவன் ஒரு திரித்துவக்காரன் அல்ல. மேலும் ஒரு இருத்துவக்காரனும் அல்ல. ஏனென்றால் அவன் கிறிஸ்து இயேசுவே கர்த்தர் என்று பிரசங்கித்தான் (2 கொரி 4 : 5). அவன் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியை அறிகிற அறிவில் வளருங்கள் என்று சபைகளுக்கு போதிக்கவில்லை. மாறாக இயேசு கிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட இயேசு கிறிஸ்துவையேயன்றி வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருங்கள் என்று போதித்தான் (1 கொரி 2 : 2). கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவில் பிதாவையும், பரிசுத்த ஆவியையும் பவுல் கண்டான். கிறிஸ்துவில் தேவத்துவம் பரிபூரணம் என்பதை கண்டு கொண்டான். பிதா குமாரன் பரிசுத்த ஆவிக்குரியவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்பதைக் கண்டு கொண்டான்.

20. கிறிஸ்து இயேசுவே **கர்த்தர்** என்றால் இந்த **கர்த்தர்** யார்? **கர்த்தர், கர்த்தர் :** இரக்கமும், கிருபையும், நீடிய சாந்தமும், மகா தயையும், சத்தியமுள்ள தேவன்.(யாத் 34 : 6) என்று கர்த்தருடைய நாமத்தை மோசேக்கு கூறியவர். ஆபிராமைத் தெரிந்துக்கொண்டு, அவனை ஊர் என்னும் கல்தேயரின் பட்டணத்திலிருந்து புறப்படப்பண்ணி அவனுக்கு ஆபிரகாம் என்னும் பேரிட்ட **தேவனாகிய கர்த்தர்** (நெகே 9 : 7) தான் அவர்.

21. மேலும் 2 கொரி 13 : 14 ல் மற்றொரு காரியத்தையும் நீங்கள் அறிந்துக்கொள்ள விரும்புகிறேன். அப். பவுல் முதலாவது கர்த்தருடைய கிருபை என்கிறான் Rev. S. பன்னீர்செல்வம் அவர்களின் திரித்துவ திருஷ்டாந்தத்தின்படி இரண்டாவது ஸ்தானத்தில் உள்ள நபரை முதல் ஸ்தானத்திற்கு எப்படி கொண்டு வந்தான்? பிதாவுக்கு முந்தினவர் குமாரனா? பவுல் இரண்டாவது ஸ்தானத்தில் உள்ள நபரை எப்படி முதல் ஸ்தானத்திற்கும், இரண்டாவது ஸ்தானத்திற்கு உள்ள நபரை முதல் ஸ்தானத்திற்கும் தள்ளினான்? அப்படியானால் பிதா இதை பொறுத்துக்கொள்வாரா? பிரியமானவர்களே Rev. S. பன்னீர்செல்வம் அவர்கள் 2 கொரி 13 : 14 ஐ கொண்டு பிசாசின் உபதேசமாகிய திரித்துவத்தை கொண்டுவர முயற்சிப்பது ஒரு பேய்த்தனத்திற்கடுத்த செயலாகும். தேவனுடைய சபையாரே நீங்கள் இந்த மாயையில் விழுந்துவிடாதீர்கள். இவரிடம் தேவனையும் நம்முடைய கர்த்தராகிய இயேசுவையும் அறிகிற அறிவு கிடையாது(2 பேதுரு 1 :2) ஆதலால் தான் வேதவாக்கியங்களை புரட்டுகிறார், சத்தியத்தை தாறுமாறாக்குகிறார்.

22. தேவனுடைய அன்பும் என்று அப். பவுல் கூறுவது பிதாவாகிய தேவனையே என்று எப்படி கூறமுடியும்? கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தேவன் இல்லையா? பேதுரு, தேவனும் இரட்சகருமாய் இருக்கிற இயேசு கிறிஸ்து என்கிறான் (2 பேதுரு 1 : 1). மேலும் கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்து என்கிறான். (2 பேதுரு 1 : 11.) அதோடு மட்டுமல்ல தேவனையும் நம்முடைய கர்த்தராகிய இயேசுவையும் அறிகிற அறிவு என 2 பேதுரு1 : 2 லும் அடுத்து கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவு என 2 பேதுரு 3 : 18 லும் கூறுகிறான். இயேசு கிறிஸ்துவை இரட்சகர், தேவன், கர்த்தர் என பேதுரு அறிக்கையிடுகிறதை காண்கிறோம். பொதுவாக தேவன் அன்பாகவே இருக்கிறார் என யோவான் தன் முதலாவது நிருபம் 4 : 16 ல் எழுதுகிறான் இதை தான் பவுலும் தேவனுடைய அன்பும் என்று குறிப்பிடுகிறான். அந்த தேவனை ஒருவரும், ஒருபோதும் கண்டதில்லை (1யோ 4 : 12) தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை பிதாவின் மடியிலிருக்கிற ஒரே பேறான குமாரனே அவரை வெளிப்படுத்தினார் (யோ 1 : 18) அதாவது தேவன் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்னும் சரீரத்தில் / நபரில் அடையாளம் கண்டுக்கொள்ளப்பட்டார். ஆதலால் தான் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து அதரிசனமான தேவனுடைய தற்சுரூபமாய் இருந்தார் (கொலோ 2 : 15) Image of the invisible God. அதாவது தேவன் தம்மை ஒரு சரீரத்தின் மூலம் மனிதனாக வெளிப்படுத்தினார். ஆதலால் அவர் இரண்டாம் ஆளோ, மூன்றாம் ஆளோ கிடையாது. அவர் தேவன். நாம் அவரை தொட்டு உணரும்படிக்கு தேவனை தம்முடைய மனித உருவில் அடையாளம் காண்பித்தார். தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை. அவரை புரிந்துக் கொள்ளவும் முடியவில்லை. ஆனால் அவர் நம்மில் ஒருவராக, பாருங்கள் மனிதனாக ஆனபோது, அவரை நாம் புரிந்துக்கொண்டோம். அப்போது அவர் நம்மோடு பேச முடிந்தது, நாமும் அவரோடு பேச முடிந்தது. நாம் அவரை நம்முடைய கரங்களினால் தொட்டு அவரை உணர முடிந்தது. இது குறித்து யோவான் எங்கள் கைகளினால் அவரை தொட்டோம் என்கிறான். (1 யோ. 1 : 1) சங்கீதக்காரன் தனது 68வது சங்கீதத்தில் 18 வது வசனத்தில் **தேவனாகிய கர்த்தர் மனுஷருக்குள் வாசம் பண்ணினார்** என முன்னறிவிக்கிறான். யோவான் இவரே மெய்யான தேவனும் நித்திய ஜீவனுமாய் இருக்கிறார் என்கிறான். (1 யோ 5 : 20) எரேமியா இவரை கர்த்தரே மெய்யான தெய்வம், அவர் ஜீவனுள்ள தேவன் என்கிறான் (எரே. 10 : 10). ஆம் எல்லாருக்கும் ஒரே தேவனும் பிதாவும் உண்டு. தேவனும் பிதாவும் இருவர் அல்ல. ஒருவரே. அவர் எல்லார் மேலும் (பிதா) அதன் பின் அவர் எல்லாரோடும் (குமாரன்). இப்பொழுது அவர் பரிசுத்த ஆவியாக நம் எல்லாருக்குள்ளும் இருக்கிறவர் (எபே 4 : 6 ) ஆம், அவர் ஒருவரே தேவன் அவருடைய நாமம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து.

23. அடுத்து 2 கொரி 13 : 14 ல் பரிசுத்த ஆவியின் ஐக்கியம் எனக் கூறப்பட்டுள்ளது. பரிசுத்த ஆவி தேவத்துவத்தில் மூன்றாவது நபர் என்று ஒருவன் போதிப்பானாகில் அவன் நிச்சயமாக பிசாசே. நிச்சயமாக சத்தியம் அவனுக்குள் கிடையாது. அவன் சத்தியத்தை அறியான். பாருங்கள் மரியாள் பரிசுத்த ஆவியினாலே கர்ப்பவதியானாள் (மத் 1 : 18) அவளிடத்தில் உற்பத்தியாய் இருக்கிறது பரிசுத்த ஆவியினால் உண்டானது (மத்

1 : 20) பரிசுத்த ஆவி, தேவனுடைய ஆவி. தேவனுடைய ஆவி மரியாள் மேல் வந்தது. உன்னதமானவருடைய பலன் அவள் மேல் நிழலிட்டது. (லுக் 1 : 35) இதன் பலனாக இயேசு பிறந்தார். (மத் 1 : 23) அப்படியானால் இயேசுவின் பிதா யார்? அவர் யாரை பிதாவென்று அழைக்கிறார்? பரிசுத்த ஆவியை அல்லவா ! அப்படியானால் பிதாவாகிய தேவனும் பரிசுத்த ஆவியும் ஒன்றல்லவா? இருவர் அல்லவே? ஒரே நபர் தானே. பின் எப்படி தேவத்துவத்தில் திரித்துவம் உண்டு, அதில் பரிசுத்த ஆவி மூன்றாவது நபர் என கூற முடியும்? நம்முடைய தேவன் குழப்பத்தின் தேவன் அல்லவே. பிசாசே மக்களை குழப்பி வருகிறான். அவனுடைய வேலையே அதுதானே. தேவகுமாரனாக பிறந்த இயேசு யார்? அவர் இம்மானுவேல் (ஏசா7 : 14) அல்லவா? இம்மானுவேல் என்பதற்கு தேவன் நம்மோடு இருக்கிறார். (மத் 1 : 23) என்று அர்த்தமல்லவா? தேவத்துவத்தில் இரண்டாவது நபராகிய குமாரன் நம்மோடு இருக்கிறார் என கூறப்படவில்லை. மாறாக தேவன் நம்மோடு இருக்கிறார் என கூறப்பட்டுள்ளது. ஆம், தேவன் ஒருவரே. அவர் பிதா ஸ்தானத்தில் நம் எல்லார் மேலும், குமாரன் ஸ்தானத்தில் நம் எல்லாரோடும், பரிசுத்த ஆவியின் ஸ்தானத்தில் நம் எல்லோருக்குள்ளும் இருக்கிறவர் (எபே 4 : 6)

24. பிசாசே, கேட்டின் மகனே, மோசம் போக்குகிறவனே நீ தேவனால் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களை வஞ்சிக்க முடியவே முடியாது. நீ ஸ்தாபன சபை மக்களை வஞ்சிக்கலாம். ஏனென்றால் அவர்கள் உன் மந்தையில் உள்ள ஆடுகள். தேவனுடைய மந்தையில் உள்ள ஆடுகள் தேவனுடைய வார்த்தைக்குதான் செவிகொடுக்கும். தேவன் அவைகளை அறிந்திருக்கிறார். அவைகள் அவருக்கு பின் செல்லுமேயன்றி அந்நியனாகிய உன் பின் செல்லாது. நீ ஆட்கொண்டுவரும் ஸ்தாபன சபைகளின் பின் செல்லாது. அவைகளை அவருடைய கரத்திலிருந்து ஒருவனும் / பிசாசும் பறித்துக்கொள்ளமுடியாது (யோ. 10:27-28)

25. மேலும் கவனியுங்கள். இயேசு கிறிஸ்து நானும் பிதாவும் ஒன்று என்கிறார். (யோ. 10 : 30) நானும் பிதாவும்இருவர் என்று அவர் கூறவில்லை. ஆனால் பேலியாளின் மக்கள் ஒரே தேவனை மூவராக்கி விடுகிறார்கள். ஆனால் இயேசுவோ நானும் பிதாவும் ஒன்று என்றே கூறுகிறார். மேலும் நான் பிதாவிலும், பிதா என்னிலும் இருக்கிறதை நீங்கள் அறிந்து விசுவாசிக்கிறதில்லையா என்கிறார். (யோ 10 : 38). இது முதல் **நீங்கள் பிதாவை அறிந்தும், பிதாவை கண்டும் இருக்கிறீர்கள் என்கிறார்** (யோ 14 : 7). என்னை கண்டவன் பிதாவை கண்டான். அப்படியிருக்க பிதாவை தான் உங்களுக்கு எப்படி காண்பிக்க முடியும் என்கிறார். (யோ 14 : 8) இதை இயேசு பிலிப்பிடம் மட்டுமல்ல, ஸ்தாபனசபையாரே உங்கள் அனைவரோடும் வேதவாக்கியங்களை கொண்டு இடைப்படுகிறார். விசேஷமாக திரித்துவத்தை விசுவாசிக்கும் ஜனங்களுக்காகவே ஆவியானவர் யோ. 14.7 ஐ எழுதி வைத்திருக்கிறார். தேவன் தான் அவர்கள் மனக்கண்களை திறக்கவேண்டும். தேவத்துவத்தில் பிதாவும் குமாரனும் ஒரே நபர் என்பதை உங்களால் அறிந்து, புரிந்து கொள்ள முடியவில்லையா? ஒரே நபர், இரு உத்தியோகங்கள் / பதவிகள். தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தில் அவரே அனைத்து பணிகளையும் செய்கிறார். எந்த ஒரு பணியையும் அவர் வேறு யாரிடமும் கொடுக்கவில்லை. ஏனென்றால் எந்த மனுஷனும் பொய்யன். தேவன் ஒருவரே சத்தியபரர். (ரோ 3 : 4)

26. அடுத்து ஒரு உதாரணத்தையும் கவனியுங்கள். இயேசு சீஷர்களிடம் நான் உங்களை திக்கற்றவர்களாகவிடேன், உங்களிடத்தில் வருவேன் அவர் (யார்? தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவி) உங்களிடத்தில் வருவார். அவர் உங்களுடனே வாசம் பண்ணுவார். அவர் உங்களுக்குள்ளே இருப்பதால் நீங்கள் அவரை அறிவீர்கள், ஆனால் உலகம் அவரை காணாது, அறியாது என்றார். (யோ 14 : 16-20) நிச்சயமாக ஸ்தாபனசபை உலகம் அவரை அறியாது, காணாது. பிதாவையும் குமாரனையும் அறிய வேண்டுமானால் என் ஜனங்களே நீங்கள் அவளுடைய (ஸ்தாபனசபைகள்) பாவங்களுக்கு உடன்படாமலும் அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும் படிக்கு அவளை விட்டு வெளியே வாருங்கள். (வெளி 18 : 2 - 4). மகாவேசியாகிய கத்தோலிக்க சபையையும், அவள் குமாரத்திகளாகிய இதர ஸ்தாபன சபைகளையும் விட்டு வெளியே வாருங்கள்.

27. ஆம், பாவத்தில் வாழ்கிற எவனும், ஸ்தாபன சபைகளில் ஐக்கியம் கொண்டிருக்கிற எவனும் கிறிஸ்துவில் பிதாவை காணவும் இல்லை. அறியவும் இல்லை. அறியவும், காணவும் அவர்களால் முடியாது. இது நூறு சதவீதம் உண்மை. இதற்கு ஆதாரமாக மற்றொரு சம்பவத்தையும் கவனியுங்கள். பரிசேயர்கள் இயேசுவினிடம் உம்முடைய பிதா எங்கே என்றார்கள். அதற்கு அவர், நீங்கள் என்னையும் அறியீர்கள், என் பிதாவையும் அறியீர்கள் : நீங்கள் என்னை அறிந்தீர்களானால், என் பிதாவையும் அறிவீர்கள் என்றார் (யோ. 8 : 19)

28. மேலும் **நானே அவர்** என்று நீங்கள் விசுவாசியாவிட்டால் உங்கள் பாவங்களிலே சாவீர்கள் என்றார். (யோ. 8 : 24) கவனியுங்கள், இதன் பின் நடந்தது என்ன? அவர் பிதாவை குறித்து பேசினார் என்று அவர்கள் அறியாதிருந்தார்கள் என யோ. 8 : 27 ல் வாசிக்கிறோம். பாருங்கள், நான் நானே அவர், என்னோடே வேறொரு தேவன் இல்லை என கர்த்தர் கூறுகிறார் (உபா 32 : 39) பாருங்கள் கர்த்தர் என்னோடே வேறே தேவன் இல்லை என்னுடனே வேறொரு நபர் இல்லை, நான் நானே என்கிறார். ஆம் பழைய ஏற்பாட்டின் யெகோவா புதிய ஏற்பாட்டின் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து. பழைய ஏற்பட்டின் கர்த்தர் நான் என்றென்றைக்கும் ஜீவித்திருக்கிறவர் என்கிறார் (உபா 32 : 40) புதிய ஏற்பாட்டில் கிறிஸ்து என்றென்றைக்கும் ஜீவித்திருக்கிறார் என யோ. 12 : 34 ல் வாசிக்கிறோம். ஆதலால் தான் இயேசு என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான் என்றார்.

29. சிலர் புருஷன் தன் தகப்பனையும் தாயையும் விட்டு தன் மனைவியோடே இசைந்திருப்பான் : அவர்கள் ஒரே

மாம்சமாயிருப்பார்கள் என ஆதி 2 : 24 ல் தியானிக்கிறோம். எவ்வாறு ஒரு புருஷனும் அவன் மனைவியும் இருவராக இருந்தாலும் ஒருவராகவே இருக்கிறார்களோ அதேப்போன்று பிதாவும் குமாரனும் இருவராக இருந்தாலும் ஒரே நபராக இருக்கிறார்கள் என வாதம் செய்கின்றனர். இந்த வாதம் நூற்றுக்கு நூறு தவறானது. அது அப்படி அல்ல. பாருங்கள் ஒரு புருஷனை ஒரு மனிதன் காணும் போது அவன் அந்த புருஷனில் அவன் மனைவியை காண்பது இல்லை. அந்த புருஷனை மாத்திரமே காண்கிறான். அவன் அந்த புருஷனில் அவன் மனைவியை காண முடியவில்லை. ஆனால் இயேசு இங்கே என்னை கண்டவன், என்னை ஒருவன் காணும் போது என் பிதாவையும் என்னில் காண்கிறான் என்கிறார். பாருங்கள் ஒருவன் என்னில் என் பிதாவை அறிந்தும் கண்டும் இருக்கிறான் என்கிறார். ஏனென்றால் அவர்கள் இரு நபர் அல்ல ஒரே நபர், இரண்டு உத்தியோகங்கள் /பதவிகள்.

30. மேலும் ஒரு எடுத்துக்காட்டை கவனியுங்கள் : 1 பேதுரு 1 : 17 க்கு வாருங்கள். அங்கு பாரபட்சமில்லாமல் அவனவனுடைய கிரியைகளின் படி நியாந்தீர்கிறவரை நாம் பிதாவாக தொழுதுக்கொண்டு வருகிறோம் என தியானிக்கிறோம். இயேசு கிறிஸ்து உயிரோடிருக்கிறவர்களையும் மரித்தோரையும் நியாயந்தீர்க்கப் போகிறார் என 2 தீமோ 4 : 1 ல் அப். பவுல் எழுதுகிறான். இப்பொழுதாவது பிதாவாகிய தேவனும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும் ஒருவரேயன்றி இருவர் அல்ல என்பதை உங்களால் கண்டுக்கொள்ள முடியவில்லையா? கண்டுக்கொள்ள முடியாவிட்டால் நீங்கள் பார்வையடையும்படிக்கு உங்கள் கண்களுக்கு கலிக்கம் போட்டுக்கொள்ளுங்கள்.

31. அடுத்து பிதாவுக்கும் குமாரனுக்கும் உள்ள ஐக்கியத்தை குறித்து இயேசு என்ன கூறுகிறார் என்பதை கவனியுங்கள். காலம் வரும், பிதாவைக்குறித்து வெளியரங்கமாக நான் உங்களுக்கு அறிவிப்பேன். அந்த நாளில் நீங்கள் என் நாமத்தினாலே வேண்டிக்கொள்வீர்கள். ஆனால் **உங்களுக்காக நான் பிதாவைக் கேட்டுக்கொள்வேன் என்று சொல்ல வேண்டியது இல்லை** (யோ. 16 : 25, 26) என்றார். ஆம் பிதாவும் குமாரனும் ஒருவரே. நான் எப்பொழுது பிதாவுக்கும் குமாரனுக்கும் உள்ள ஐக்கியத்தை அறிய்வந்தேனோ, அன்று முதல் ஜெபிக்கும் போது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்னும் உம்முடைய நாமத்தினால் வேண்டிக்கொள்கிறேன் என்று தான் ஜெபிக்கிறேன். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் எங்கள் ஜெபங்களை ஏறெடுக்கிறேன் பரம பிதாவே என்று ஜெபிப்பது இல்லை. ஏனென்றால் எனக்காக அவர் பிதாவை வேண்டிக்கொள்ளவேண்டிய தேவை இல்லை, அவரே பிதாவாக இருக்கிறார். பிதாவுக்கும் குமாரனுக்கும் உள்ள ஐக்கியத்தை காண என் மனக்கண்களை கர்த்தர் திறந்தார்.

32. மேலும் தியானியுங்கள். இயேசு : நான் பிதாவினிடத்திலிருந்து புறப்பட்டு உலகத்திலே வந்தேன் ; மறுபடியும் உலகத்தை விட்டு பிதாவினிடத்திற்கு போகிறேன் என்றார். (யோ. 16 : 28) மேலும் நான் போகிறது உங்களுக்கு பிரயோஜனமாக இருக்கும். நான் போகாதிருந்தால், தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார், நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன் என்றார் (யோ. 16 : 7) இங்கு இயேசு பரிசுத்த ஆவியை குறித்து பேசுகிறார். அந்த பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளன் தானே என்பதை உறுதிப்படுத்த அவர், நான் பிதாவினிடத்திற்கு போகிறேன், ஆதாலால் கொஞ்சக்காலம் என்னை காணாதிருப்பீர்கள் மறுபடியும் கொஞ்சகாலத்தில் என்னை காண்பீர்கள் என்கிறார். (யோ 16 : 16). ஆம், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு,உயிர்த்தெழுந்தார். கொஞ்சக்காலம் நாம்அவரை காணவில்லை. ஏனெற்றால் அவர் பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டார். மீண்டுமாக பெந்தெகொஸ்தே நாளான்று பரிசுத்த ஆவியாக சீஷர்கள் மேல் இறங்கினார் / வந்து அமர்ந்தார். பெந்தெகொஸ்தே என்பது ஒரு ஸ்தாபனம் அல்ல. ஸ்தாபன சபைகளை குறிப்பதும் அல்ல. மாறாக அது விரும்பும் எவருக்கும் கிடைக்கும் ஒரு உன்னத அனுபவம் ஆகும். அந்த அனுபவம் ஒவ்வொரு தனிப்பட்ட நபருக்கும் உரியது. T.P.M. க்கு மட்டும் உரியது அல்ல. அதை நாடும் அனைவருக்கும் உரியது. ஆனால் அந்த அனுபவத்தை பெற நீங்கள் முதலில் மனந்திரும்பி, உங்கள் பாவமன்னிப்புக்கென்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வேண்டும். (அப் 2 : 38) T.P.M. நாங்கள் பரிசுத்த ஆவியை பெற்றுக்கொண்டோம் என்று கூறி தங்களை தாங்களே வஞ்சித்துக்கொண்டிருக்கிறார்கள்.

33. 1 தீமோ 3 : 16 ன் படி தேவபக்திக்குரிய ரகசியமானது தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டார். தேவன் ஒருவரே. தேவன் ஒரு ஆவி (யோ. 4 : 24) கர்த்தர் ஆவியானவர் (2 கொரி 3 : 17) தேவன் ஒருவர், கர்த்தர் மற்றொருவரா? தேவனும், கர்த்தரும் இரு நபர்களா? தேவன், தேவனாகிய கர்த்தர், கர்த்தர் இப்பெயர்களெல்லாம் ஒரே நபரையே குறிக்கிறது. கர்த்தரே தேவன் என்று அறியுங்கள். நாம் அவர் ஜனங்களும், அவர் மேய்ச்சலின் ஆடுகளுமாய் இருக்கிறோம். (சங் 100 : 3). ஆம், அவர் நம்முடைய தேவன். நாம் அவர் மேய்ச்சலின் ஜனங்களும் அவர் கைக்குள்ளான ஆடுகளுமாமே. சங் 95 : 7. இயேசு: நானே நல்ல மேய்ப்பன், நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காக தன் ஜீவனை கொடுக்கிறான் என்கிறார் (யோ. 10 : 11) ஆம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தம் ஜீவனை நமக்காக கொடுத்தார். அவரே நம்முடைய தேவன்

34. பாருங்கள் பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசு கிறிஸ்துவை கர்த்தர் என்று நாவுகள் யாவும் அறிக்கை பண்ணவேண்டும் (பிலி 2 : 11) இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர், பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கவேண்டும் (பிலி 2 : 10, சங் 95 : 6). ஏனெற்றால் அவரே தேவன், வேறொருவரும் இல்லை. ஏசா 45 : 21, 22 & 23) இவரை யாருக்கு சாயலாயும் சமமுமாக்க முடியும்? யாருக்கு

அவரை ஒப்பாக்கும்படிக்கு ஒப்பிட முடியும்? நான் நானே தேவன் வேறொருவரும் இல்லை நானே தேவன் எனக்கு சமானமில்லை என்கிறார் (ஏசா 46 : 5,9) தேவன் ஒருவரே. திரித்துவம் பிசாசு. பிசாசே நீ என் ஜனங்களை ஒருக்காலும் வஞ்சிக்க முடியாது. ஏனென்றால் அவர்கள் தேவனால் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்கள். அவர்கள் அவருடைய மாம்சத்திற்கும், எலும்புக்கும் உரியவர்கள். எபே 5 : 30

35. மேலும் கவனியுங்கள் தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டார். தேவதுவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக இயேசு கிறிஸ்துவுக்குள் வாசமாய் இருக்கிறது (கொலோ 2 : 9) ஆதாலால் தான் யோவான் குமாரனாகிய இயேசு கிறிஸ்துவே மெய்யான தேவனும் நித்திய ஜீவனுமாயிருக்கிறார் என்கிறான் (1 யோ 5 : 20) ஆம், நித்தியானந்தமுள்ள ஏகசக்கராதிபதியும், இராஜாதிராஜாவும், கர்த்தாதிகர்த்தாவும், ஒருவராய் (இருவராய் அல்ல, மூவராய் அல்ல, மாறாக ஒருவராய்) சாவாமை உள்ளவரும், சேரக்கூடாத ஒளியில் வாசம் பண்ணுகிறவரும், மனுஷனில் ஒருவரும் கண்டிராதவரும், காணக்கூடாதவருமாகிய தேவன் (1 தீமோ 6 : 16) காலம் நிறைவேறின போது ஸ்திரீயினிடத்தில் பிறந்து (கலா 4 : 3) மாம்சத்திலே வெளிப்பட்டார். உலகத்திலே விசுவாசிக்கப்பட்டார். மகிமையிலே ஏறெடுத்துக்கொள்ளப்பட்டார். 1 தீமோ 3 : 16)

36. தேவன் ஒரு ஆவி (யோ. 4 : 24) அவர் மாம்சத்தில் வெளிப்பட்டார் (1 தீமோ 3 : 16 ) எதற்காக? பாவத்தில் வீழ்ந்த மனுக்குலத்தை, தம்முடைய இரத்தத்தை சிந்தி மீட்க, இரட்சிக்க. ஆவியாகிய தேவன் இரத்தத்தை சிந்த முடியாது. ஆதியில் நடந்த பாவம் இரத்தசம்பந்தமானது. ஏவாள், அந்த காட்டு ஜீவனால் கர்ப்பவதியாகி காயினை பெற்றாள். காயின் பொல்லாங்கானால் உண்டானவன் (1 யோ 3 : 12) இரத்தத்திற்கு இரத்தம் சிந்தப்படவேண்டும். ஏனெற்றால் அந்நாட்களில் தேவனுடைய கட்டளை ஜீவனுக்கு ஜீவன், கண்ணுக்கு கண் பல்லுக்கு பல், கைக்குக் கை, காலுக்குக் கால், சூட்டுக்கு சூடு, காயத்துக்குக் காயம், தழும்புக்குத் தழும்பு (யாத் 21 : 23,24,25). தேவன் இரத்தத்தை சிந்தினால் தான் இரத்தத்தினால் உண்டான பாவத்திலிருந்து மனுகுலத்தை மீட்க முடியும். அதற்காக ஆவியாகிய தேவன் மாம்சத்தில் பிறக்க நேர்ந்தது. ஏனென்றால் இரத்தம் சிந்துதல் இல்லாமல் பாவமன்னிப்பு உண்டாகாது (எபி 9 : 22) இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பவங்களையும் நீக்கி, நம்மை சுத்திகரிக்கும் (1 யோ 1 : 7) ஆவியாகிய தேவன் தம்முடைய இரத்தத்தை சிந்தி மனுக்குலத்தை மீட்க மாம்சத்தில் வெளிப்பட்டதினால் அவர் இன்னொரு தேவன் ஆகிவிடவில்லை. அவர், அதே தேவன் தான்.

37. நீங்கள்இயேசு கிறிஸ்துவினுடைய தெய்வீகத்தை அறிய வேண்டுமானால் இயேசு கிறிஸ்துவை வெளிப்படுத்தின விசேஷத்திற்கு வரவேண்டும். அங்கு அவர் யார் என்று கூறப்பட்டுள்ளது. அவர் : 1. இருக்கிறவர் 2. இருந்தவர் 3. வருகிறவர் 4. உண்மையுள்ள சாட்சி 5 மரித்தோரிலிருந்து முதற்பிறந்தவர் 6. பூமியின் இராஜாக்களுக்கு அதிபதி 7 . இருக்கிறவரும், இருந்தவரும், வருகிறவருமாகிய சர்வ வல்லமையுள்ள கர்த்தர். 8. அல்பாவும், ஒமெகாவும் ஆதியும் அந்தமுமாய் இருக்கிறவர் 9. முந்தினவரும் பிந்தினவருமாய் இருக்கிறவர் 10. ஏழு குத்துவிளக்குகளின் மத்தியிலே, நிலையங்கி தரித்து, மார்கவசமாகிய பொற்கச்சையை கட்டியிருக்கிற மனுஷக்குமாரனுக்கு ஒப்பானவர் 11. உயிருள்ளவருமாய் இருக்கிறவர் 12. மரணத்திற்கும் பாதாளத்திற்கும் உரிய திறவுகோல்களை உடையவர் 13. இரு புறமும் கருக்குள்ள பட்டையத்தை உடையவர் 14. தேவகுமாரன் 15. உள்ளிந்திரியங்களையும் இருதயங்களையும் ஆராய்கிறவர் 15. தேவனுடைய ஏழு ஆவிகளையும் ஏழு நட்சத்திரங்களையும் உடையவர் 16. பரிசுத்தமுள்ளவர் 17. சத்தியமுள்ளவர் 18. தாவீதின் திறவுகோலை உடையவர் 19. ஒருவரும் பூட்டக்கூடாதபடிக்கு திறக்கிறவர். 20. ஒருவரும் திறக்கக்கூடாதபடிக்கு பூட்டுகிறவர் 21. உண்மையும் சத்தியமுள்ள சாட்சி 22. தேவனுடைய சிருஷ்டிப்புக்கு ஆதி 23. வானத்தில் ஒரு சிங்காசனம் வைக்கப்பட்டிருந்தது. அந்த சிங்காசனத்தில் மேல் வீற்றிருந்தவர் (வெளி 4 : 2, 1 : 4, 19 : 4) 24. இருக்கிறவரும், இருந்தவரும், வருகிறவருமாகிய சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் 25. சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறவர் 26. கர்த்தராகிய தேவரீர், மகிமையையும் கனத்தையும் வல்லமையையும் பெற்றுக்கொள்ள பாத்திரர். 27. சகலத்தையும் சிருஷ்டித்தவர் 28. யூத கோத்திரத்து சிங்கம். 29. தாவீதின் வேருமானவர் 29. அடிக்கப்பட்ட வண்ணமாயிருந்த ஆட்டுக்குட்டி 30. வல்லமை, ஐஸ்வரியம், ஞானம், பெலம், கனம், மகிமை, ஸ்தோத்திரம் பெற்றுக் கொள்ள பாத்திரர் 31. ஜீவனுள்ள தேவன் 32. வானத்தையும் அதில் உள்ளவைகளையும், சமுத்திரத்தையும் அதில் உள்ளவைகளையும் சிருஷ்டித்தவர் 33. பூலோகத்தின் ஆண்டவர் 34. சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் 35. பரிசுத்தவான்களின் ராஜா 36. கர்த்தர் 37. கர்த்தாதி கர்த்தா 38. இராஜாதிராஜா 39. தேவனாகிய கர்த்தர் 40. நீதியாய் நியாந்தீர்க்கிறவர் 41. தேவனுடைய வார்த்தை 42. சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தரும் ஆட்டுக்குட்டியுமானவர் 43. தேவனும் ஆட்டுக்குட்டியுமானவர் 44. பரிசுத்த தீர்க்கதரிசிகளின் கர்த்தராகிய தேவனானவர் 45. பிரகாசமுள்ள விடிவெள்ளி நட்சத்திரம்.

38. வெளிப்படுத்தின விசேஷமனாது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை குறித்து வெளிப்படுத்தின விசேஷமாகும். இதில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சுமார் 45 நாமங்களுக்கு மேலாக அழைக்கப்படுகிறார். நீங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து யார் என்பதை அறிந்துக்கொள்ள வேண்டும் என்பதற்காகவே இவைகளை தேர்ந்தெடுத்து எழுதியுள்ளேன்.

39. இவர் தேவகுமாரன் (லூக் 1 : 35). இவர் தாவீதின் குமாரன் (லூக் 1 : 32) இவர் மனுஷகுமாரன் (மத். 16 : 13) குமாரத்துவத்தில் இயேசு மூன்று குமாரத்துவங்களுக்கும் உரியவர். இது இவரை குமாரத்துவத்தில் ஒரு திரித்துவமாக ஆக்கிவிடாது / மூவராக்கிவிடாது. அதேப்போன்று தான் தேவத்துவத்தில்அவர் பிதா, குமாரன்,

பரிசுத்த ஆவி போன்ற உத்தியோகங்களை / பதவிகளை வகிக்கிறார். இது இவரை ஒரு திரித்துவம் ஆக்கிவிடாது / மூவராக்கிவிடாது. குமாரத்துவத்தில் இவர்கள் மூவர் கிடையாது ஒரே நபர் மூன்று உத்தியோகங்களில். அதேப்போன்று தேவத்துவத்தில் இவர்கள் மூன்று நபர்கள் கிடையாது. ஒரே நபர் மூன்று உத்தியோகங்களில். பிதா, குமாரன், பரிசுத்த ஆவி, தேவ குமாரன், மனுஷகுமாரன், தாவீதின் குமாரன் யாவும் தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தில் அவரது பலவிதமான உத்தியோகங்களும் / பதவிகளும் ஆகும். குமாரத்துவத்தில் முதல் இரு உத்தியோகங்களையும் கர்த்தர் வகித்து விட்டார். இனி தாவீதின் குமாரன் உத்தியோகம் மட்டும் நிலுவையில் உள்ளது. அது ஆயிரம் வருடங்கள் அரசாட்சியின் போது நிகழும்.

40. அடுத்து இருக்கிறவர், இருந்தவர், வருகிறவர் என்று கூறப்பட்டுள்ளது. இவ்வுலகத்தில் இயேசு இருக்கும் போது மனுஷகுமாரனாக / தீர்க்கதரிசியாக இருந்தார். இப்பொழுது நம்முடைய பலவீனங்களுக்காக பரிந்துபேசும் ஆசாரியனாக இருக்கிறார். அடுத்து தாவிதின் குமாரன் / இராஜாவாக ஆயிரம் வருடங்கள் அரசாட்சி செய்ய இருக்கிறார். அது இனி வரப்போகின்ற ஒன்றாக இருக்கிறது. இது இயேசு கிறிஸ்துவை மூன்று நபர்களாக்கி / குமாரர்களாக்கி விடாது. அவர் ஒருவரே. மூன்று விதமான பதவிகளில் குமாரத்துவத்தில் காணப்படுகிறார்.

41. வெளி 4-ம் அதிகாரத்திற்கு வாருங்கள். இங்கு வானத்தில் ஒரு சிங்காசனம் வைக்கப்பட்டிருந்தது என்றே உள்ளது. பிதாவுக்கும், குமாரனுக்கும், பரிசுத்த ஆவிக்குமாக மூன்று சிங்காசனங்கள் அல்ல அல்லது ஒரே சிங்காசனத்தில்அடுத்து அடுத்து மூவர் அல்ல. மாறாக அந்த ஒரே சிங்காசனத்தின் மேல் ஒரு வீற்றிருந்தார் வெளி 4 : 2 (இருவர் அல்ல, மூவர் அல்ல மாறாக ஒருவர்) 24 மூப்பர்களும், 4 ஜீவன்களும் வணக்கமாய் விழுந்து ஆமென், அல்லேலூயா என்று சொல்லி சிங்காசனத்தில் மேல் வீற்றிருக்கும் தேவனை தொழுதுக்கொண்டார்கள் (வெளி 19 : 4) பாருங்கள் சிங்கானத்தின் மேல் ஒருவர் வீற்றிருந்தார். அவரை தொழுதுக்கொண்டார்கள். அவரை தேவதூதர்களும் தொழுதுக்கொண்டார்கள். (எபி 1 : 6)

42. வெளி 4 : 2 ல் ஒரு சிங்காசனம் வைக்கப்பட்டிருந்தது. அதில் ஒருவர் வீற்றிருந்தார் என கண்டோம். இப்பொழுது 11 வது வசனத்தை தியானியுங்கள் அங்கு **நீரே சகலத்தையும் சிருஷ்டித்தீர்** என்று கூறப்பட்டுள்ளது. மேலும் கர்த்தாவே, தேவரீர் என ஒருமையில் கூறப்பட்டுள்ளது. இயேசு கிறிஸ்து தான் அந்த சிருஷ்டி கர்த்தர் என வெளிப்படுத்தின விசேஷத்தை எழுதிய யோவான் தன் சுவிசேஷத்தில் யோ 1 : 3 ல் கூறுகிறான். ஆம் பழைய ஏற்பாட்டின் யெகோவா, ஆதி 1 : 1 ல் கூறப்பட்டதேவன் - கர்த்தராகிய இயேசு கிறிஸ்து.

43. இந்த சத்தியத்திற்கு விரோதமான திரித்துவம் எங்கிருந்து வந்தது? கி.பி. 325 ல் நடைபெற்ற நிசயாவின் ஆலோசனை சங்கத்தில் இது ஆதார போதனையாக (Fundamental Doctrine) ஏற்படுத்தப்பட்டது. வேதவாக்கியங்களில் காணப்படாத திரித்துவம் என்னும் போதனை ரோமாபுரியில் உண்டாயிருந்த அஞ்ஞான தெய்வங்களை ஆதாரமாக கொண்டு உண்டாக்கப்பட்டது.

44. ரோமன் கத்தோலிக்க சபை தன்னை தாய்சபை என்று அழைத்துக்கொண்டிருக்கிறது. அது உண்மைதான். ரோமாபுரியின் முதல் சபையாக இருந்த அது, பின் வாங்கி, பாவத்தில் பிரவேசித்தது. ஸ்தாபனமாக மாறிய முதல் சபை இதுவே. தாயாக அது இருந்து அநேக குமாரத்திகளை பெற்றது. ரோமாபுரியின் ஏழு மலைகள் மேல் உட்கார்ந்திருக்கும் அவள் வேசியாக இருந்து அநேக குமாரத்திகளை பெற்றாள். இவர்கள் தான் அவளிலிருந்து வெளிவந்து ஸ்தானங்களை உண்டாக்கிய புராட்டஸ்டண்டு, பெந்தெகொஸ்தே மார்க்கங்கள். இதில் தென்னிந்திய திருச்சபை, இந்திய சுவிசேஷ திருச்சபை, லூத்தரன், பாப்திஸ்ட், ஏழாம் நாள் திருச்சபை, தி பெந்தெகொஸ்தே சபை போன்ற அநேக ஸ்தாபன சபைகள் உண்டு. ஆக தாயும் அவளது குமாரத்திகளும் ஒன்று சேர்ந்து கிறிஸ்துவுக்கும் அவருடைய வார்த்தைக்கும் விரோதமான அந்திக்கிறிஸ்துவாக இருக்கிறார்கள்.

45. பழைய ஏற்பாட்டின் யெகோவா தான் புதிய ஏற்பாட்டின் இயேசு கிறிஸ்து. புதிய ஏற்பாடு வேறொரு தேவனை வெளிப்படுத்தவில்லை. தேவத்துவத்தில் இரண்டாவது, மூன்றாவது நபரை வெளிப்படுத்தவில்லை. தேவத்துவம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவில் மாத்திரம் இருப்பதையே வெளிப்படுத்துகிறது. கிறிஸ்து தம்மை வெளிப்படுத்தவேண்டுமென்று எண்ணி தாழஇறங்கி வரவில்லை அல்லது தேவத்துவத்தின் இரண்டாவது நபரை வெளிப்படுத்த வரவில்லை. மாறாக பிதா யார் என்பதை வெளிப்படுத்தி, அறிவிக்கவே தாழயிறங்கிவந்தார். பாருங்கள் ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார் (ஏசா. 9 : 6) இயேசுவே தேவன். அவரும் பிதாவும் ஒன்று. ஒரே தேவன் நமக்கு உண்டு. அவர் நாமம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து.

46. இயேசு கிறிஸ்துவை பற்றிய வெளிப்படுத்துதல் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிடமிருந்து வரவேண்டியதேயன்றி மனித ஞானத்தின் மூலம் கிடைக்காது. அநேக வேதவாக்கியங்களை மனப்பாடம் செய்தாலும் அது கிட்டாது. இயேசு கிறிஸ்துவை பற்றிய வெளிப்பாட்டை பெற நீங்கள் முதலாவது பரிசுத்த ஆவியை பெறவேண்டும். பாருங்கள் பரிசுத்த ஆவியேயன்றி இயேசு கிறிஸ்துவை கர்த்தர் என்று ஒருவரும் சொல்லக்கூடாது.( 1கொரி 12 : 3). தேவனுடைய ஆவியேயன்றி ஒருவனும் தேவனுக்குரியவைகளை அறிய மாட்டான் (1 கொரி 2 : 11) தேவனுடைய ஆவி இவைகளை யாருக்கு வெளிப்படுத்த சித்தமாய் இருக்கிறாரே அவர்களேயன்றி வேறொருவரும் தேவத்துவத்துக்கடுத்த காரியங்களை அறிய மாட்டார்கள். பிதா ஒருவனுக்கு

குமாரனை வெளிப்படுத்தவேண்டும். குமாரன் ஒருவனுக்கு பிதாவை வெளிப்படுத்தவேண்டும். (மத் 11 : 27) பிதா, குமாரனை சீமோன் பேதுருக்கு வெளிப்படுத்தினார் (மத். 16 : 16, 17). குமாரன் பிலிப்புக்கு பிதாவை வெளிப்படுத்தினார். (யோ 14 : 8,9)

47. வேதவாக்கியங்களில் காணப்படும் சத்தியங்களை அறிந்துக்கொள்ள வேதவாக்கியங்கள் எழுதப்பட்ட மொழியில் பாண்டித்துவம் தேவையில்லை. வேதவாக்கியங்களை குறித்த வெளிப்படுத்துதலே நமக்கு தேவை. அநேகருடைய சிந்தை அவர்கள் சார்ந்திருக்கும் ஸ்தாப சபைகளின் பாரம்பரியங்களினால் மறைக்கப்பட்டிருப்பதால் அவர்கள் வேதவாக்கியங்களை புரிந்துக்கொள்ள முடியவில்லை சமீபத்தில் சென்னையில் ஒரு குடும்பத்தை சந்தித்தேன். ஞானஸ்நானத்திற்கு அடுத்த காரியங்களை அவர்களோடு சம்பாஷித்தேன். வேதவாக்கியங்களில் யாரும் பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என உச்சரித்து ஞானஸ்நானம் கொடுத்ததாக, ஞானஸ்நானம் பெற்றதாக ஆதாரங்கள் இல்லை. அனைவரும் இயேசு கிறிஸ்து நாமத்தினால் தான் ஞானஸ்நானம் பெற்றார்கள் என வேதவாக்கியங்களை ஆதாரமாக கொண்டு அவர்களுக்கு விவரித்தேன். அவர்களும் அதை ஒப்புக்கொண்டார்கள். அவர்களால் அதை மறுக்க முடியவில்லை. அப்படியானால் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் எடுக்க தடை என்ன என்றேன். அவர்கள் கூறிய காரணம் : அவர்கள் எந்த அளவிற்கு தேவனுடைய வார்த்தையை சாராமல் ஸ்தாபன சபைகளை சார்ந்திருக்கிறார்கள் என அறிந்துக்கொண்டேன். அவர்கள் என்னிடம் பாருங்கள் எங்கள் சபை (அசெம்பிளி ஆப் காட்) ஒரு ஆவிக்குரிய சபை. அது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் கொடுப்பது இல்லை. அப்படியிருக்க நாங்கள் எப்படி கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் எடுக்கமுடியும் என்றார்கள். அது என்ன? அவர்கள் தேவனுடைய வார்த்தையை ஏற்றுக்கொள்ளக்கூடிய மனப்பக்குவத்தில் இல்லை. ஸ்தாபன சபைகளுக்கு அடிமைகளாக இருக்கிறார்கள். ஸ்தாபன சபைகள் அந்திக்கிறிஸ்துவினால் வழிநடத்தப்பட்டு வருகிறது என்பதை அறியாதிருக்கிறார்கள். ஸ்தாபன சபைகள் சுட்டெரிக்கிறதற்கு கட்டுகளாக கட்டப்பட்டு வருகிறது என்பதை அவர்கள் அறியாதிருக்கிறார்கள். (மத் 13 : 30)

48. பலர் எழுதிய புத்தகங்களை சிலர் ஒப்பிட்டு பார்த்து ஆராய்வதின் மூலம் வேதவாக்கியங்களின் உண்மையான அர்த்தத்தை அறிந்துக்கொள்ள முடியாது. தேவனிடத்திலிருந்து வரும் வெளிப்படுத்துதலே வேதவாக்கியங்களின் உண்மையான அர்த்தத்தை நமக்கு கொடுக்க முடியும். ஆதலால் தான் அப். பவுலும் நாங்கள் மனுஷ ஞானம் போதிக்கிற வார்த்தைகளாலே பேசாமல், ஆவிக்குரியவைகளை ஆவிக்குரியவைகளோடே சம்பந்தப்படுத்தி காண்பிக்கிறோம் என்றான் (1 கொரி 2 : 13). அவன் பிரசங்கித்த சுவிசேஷத்தை ஒரு மனுஷனால் பெற்றதும் இல்லை, மனுஷனால் கற்றதுமில்லை. இயேசு கிறிஸ்துவே வெளிப்படுத்தினார் என்கிறான். (கலா 1 : 11 , 12)

49. Rev. மற்றும் Dr. போன்ற பட்டங்களை கொண்டு வேதவாக்கியங்களை நாம் அறிந்துக்கொள்ள முடியாது. வேதவாக்கியங்களின் அர்த்தத்தை பரிசுத்த ஆவியே நமக்கு போதிக்க வேண்டும். பரிசுத்த ஆவியே தம்முடைய வார்த்தைகளின் அர்த்தத்தை நமக்கு வெளிப்படுத்தி கொடுக்கவேண்டும். தேவனே தம்முடைய வார்த்தையின் வியாக்கியானி. அதை Rev. S. பன்னீர்செல்வம் அவர்கள் தன் கரங்களில் எடுத்துக்கொள்ள முடியாது. தேவன் தாமே தம்முடைய ஆவியின் மூலமாக ஜீவனை கொடுக்கும் வெளிப்பாடுகளை நமக்கு அருளவேண்டும்.

50. பிசாசினால் வழிநடத்தப்படும் திரித்துவ ஸ்தாபன சபைகள் நான்கு பக்கமும் நம்மை நெருக்கமாக சூழ்ந்துள்ள இந்த காலத்தில் தேவன் தமக்கு சொந்தமானவர்களை சாத்தனால் வஞ்சிக்கபட அனுமதிக்கமாட்டார். ஏனென்றால் சாத்தான் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களை வஞ்சிக்கமுடியாது. தெரிந்துக்கொள்ளப்பட்டவர்கள் தேவனுடைய மந்தையிலுள்ள ஆடுகள். தேவனால் தெரிந்துக்கொள்ளப்படாதவர்கள் ஸ்தாபன சபைகளில் உள்ள ஆடுகள். வாசல் வழியாய் பிரவேசியாமல், வேறுவழியாய் ஏறுகிறவனே அவர்களுடைய மேய்ப்பன்.

51. தேவனுடைய மந்தையிலுள்ள ஆடுகளுக்கு மூன்று எதிரிகள் உண்டு 1. திருடன். (யோ. 10 : 1, 8, 10.) திருடன் தந்திரமாக ஏமாற்றி களவு செய்கிறான். தனது வழியில் விழுகிறவர்களை சாதுரியமாய் கொள்ளையடிக்கிறான், ஏமாற்றுக்கிறான். 2. கொள்ளைக்காரன் / ஓநாய். (யோ. 10 : 1, 8). கொள்ளைக்காரன் பலாத்காரமாய் மற்றவர்களை தாக்கி வன்முறையில் அவர்கள் பொருட்களை எடுத்து செல்கிறான். கள்ள தீர்க்கதரிகளும், கள்ள போதகர்களும் ஓநாய்களே (மத் 7 : 15, அப். 20 : 29) 3. கூலியாள். 9யோ : 10 : 1,2,13.) இவன் தனக்கு கிடைக்கும் கூலிக்காகவே ஆடுகளை பார்த்துக்கொள்கிறான். இவனுக்கு ஊழியம் ஒரு உலகப்பிரகாரமான வேலை. இவனுக்கு தன்னையும் தன் குடும்பத்தையும் காத்து கொள்வதே முக்கியம். எதிரிகள் வரும்போது ஓடிவிடுகிறான். இவனுக்கு ஆடுகள் மீது உண்மையான கவலையில்லை. இவன் தேவனுடைய ஊழியத்தை ஒரு தொழிலாக அல்லது வியாபாரமாக கொண்டுள்ளான். பின் தன் சுயநல திட்டங்களை தீட்டி அதை நிறைவேற்ற ஊழியம் செய்கிறான். இவர்கள் பிறர்களிடம் நிதியுதவிகளை பெற்ற பணத்திற்காக ஊழியம் செய்ய முன்வருகிறார்கள். **வாடகைக்கு, விற்பனைக்கான** பாஸ்டர்களே [illegible] மத்தியில் அதிகம் அதிகம். இவர்கள் பணத்திற்காக கர்த்தருக்கு ஒரு பணி செய்ய தங்க[illegible] விற்றுப்போட்டார்கள். தீர்க்கதரிசியின் செய்தி, இக்காலத்திற்குரிய செய்தி என்று கூறிக்கொள்பவ[illegible] மத்தியில் உள்ள பாஸ்டர்களில் நூற்றுக்கு தொன்னூற்றொன்பது பேர் வாடகைக்கும், விற்பனைக்கா[illegible]

உள்ளனர்.

52. நாங்கள் தேவனை நேசித்து, ஆவிக்குரிய சபைகளுக்கு போய், உரத்த சத்தமிட்டு, சந்தோஷத்தினால் பொங்கி பாடி, உணர்ச்சிவசப்படுகிறோம் என ஜனங்கள் கூறுகிறார்கள். இருப்பினும் அவர்கள் வேதவாக்கியங்களை பின்பற்றி ஜீவிப்பது இல்லை. அது அவர்கள் உண்மையாகவே தேவனை நேசிப்பது இல்லை என்பதை தெளிவுப்படுத்துகிறது. நான் கடந்த பத்தியில் எழுதிய குடும்பத்தாரையே உதாரணத்திற்காக எடுத்துக்கொள்ளுங்கள்.

53. ஆதியாகமம் தொடங்கி மல்கியா முடிய காணப்படும் பழைய ஏற்பாட்டு புத்தகங்கள் இயேசு கிறிஸ்துவை குறித்த வெளிப்பாடுகளை தங்களுக்குள் கொண்டுள்ளன. சில முழு புத்தகம் இயேசுவையும் அவருடைய ஊழியத்தையுமே விவரிக்கின்றன. ஆயினும் ஆவியில் உணர்த்தப்பட்ட ஒரு சிலரை தவிர மற்றயாரும் இயேசு கிறிஸ்து யார் என்பதை கண்டுக்கொள்ள முடியவில்லை. பாருங்கள் ஒரு சிலர்தான் காண்கின்றனர். அன்று சுமார் ஆண், பெண், குழந்தைகள் அனைத்துமாக இருபது லட்சம் பேர் எகிப்தைவிட்டு வெளியே வந்தார்கள். கானான் தேசத்திற்கு அவர்கள் அழைத்துச்செல்லப்பட்டார்கள். ஆனால் முடிவில் அவர்களில் யோசுவா மற்றும் காலேப் தான் கானான் தேசத்திற்குள் பிரவேசித்தார்கள். ஆம் ஒரு சிலர் தான்.

54. முடிவாக திரித்துவம் பிசாசின் உபதேசம். வேதவாக்கியங்களிலிருந்து மாறுபாடான உபதேசம், கள்ள கபடமுள்ள வேலையாட்களின் உபதேசம். உலகம் அனைத்தையும் மோசம் போக்குகிற பிசாசு என்றும் சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய அந்த பெரிய வலுசர்ப்பத்தின் வஞ்சிக்கும் உபதேசம் ஆகும். இந்நாட்களில் மேய்ப்பர்களில் தங்களுக்கே சேவை செய்துக்கொண்டும், தங்கள் குடும்ப நலத்திற்காகவே ஊழியம் செய்துகொண்டு வருபவர்கள் அதிகம் அதிகம். இவர்கள் கிறிஸ்து இயேசுவிற்குரியவைகளை தேடாமல் தங்களுக்குரியவைகளையே தேடுகிறார்கள் (பிலி 2 : 20, 21) மேய்ப்பர்கள் மனப்பூர்வமாய், அவலட்சனமான ஆதாயத்திற்காக அல்ல, மனஉற்சாகத்தோடு, மந்தைக்கு மாதிரியாக ஆடுகளை பராமரிக்க வேண்டும். ஆடுகளுக்காக தொண்டு செய்கிறவனாக இருக்கவேண்டும். ஆடுகளை கொண்டு தனக்காக தொண்டு செய்துக்கொள்கிறவனாக இருக்கக்கூடாது. இன்று மேய்ப்பர்களில் அநேகர் இதைத்தான் செய்கிறார்கள். ஊழியம் தங்கள் சொந்த நலனுக்காகவே காணப்படுகிறது. தங்கள் ஊழியத்தை தக்கவைத்துக்கொள்ள, பாதுகாக்க என்னென்ன மேற்கொள்ள வேண்டுமோ அத்தனையும் செய்கிறார்கள். காலேப் யோசுவாவுடன் ஐக்கியம் வைத்துள்ளவர்கள் இந்த சபைக்கு தேவையில்லை என்று பிரசங்க பீடத்திலிருந்து பேசுகிறார்கள். மேய்ப்பன் என்ற பதவியை தங்கள் சொந்த லாபத்திற்காகவும், மகிமைக்காவும் துஷ்பிரயோகம் செய்யப்படுகிறது. தங்கள் சொந்த தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளவே ஊழியத்தை பயன்படுத்துகின்றனர்.

55. நான் பிதாகுமாரன் பரிசுத்த ஆவி என்பதின் பேரில் நம்பிக்கை கொண்டுள்ளவன். அவைகள் தேவனுடைய மூன்று உத்தியோகங்கள் / பதவிகள் என விசுவாசிக்கிறேன். அவர்கள் மூன்று தேவர்கள் என்று விசுவாசிப்பது இல்லை. ஒரே தேவன், அவர் பிதாகுமாரன் பரிசுத்த ஆவியாக இருக்கிறார். அவர் மூன்று நபர்களாக அல்ல. பிதாகுமாரன் பரிசுத்த ஆவி ஒரே தேவனுடைய உத்தியோகங்களை குறிக்கும் மூன்று பெயர்களே. அவர் பிதாவாகிய தேவன். ஆதியில் நிச்சயமாக அவர் அப்படித்தான் இருந்தார். அவர் மாம்சத்தில் பூமிக்கு வந்தபோது தேவனுடைய குமாரனானார். இப்பொழுது அவர் எனக்குள் வாசம் செய்யும் பரிசுத்த ஆவி. பாருங்கள் அவர் ஒரே தேவன் மூன்று உத்தியோகங்களை கொண்டவர். மேலும் கவனியுங்கள். ஒரு காலத்தில் அவர் தொடக்கூடாதவராக இருந்தார். அதன் பிறகு அவர் மாம்சத்தில் இறங்கிவந்து என் பாவங்களையும் உங்கள் பாவங்களையும் சுமந்தார். இப்பொழுது பரிசுத்த ஆவியாக எனக்குள்ளும் உங்களுக்குள்ளும் வாசம் செய்கிறார். இப்பொழுது நானும் அவரும், அவர் ஏதேன் தோட்டத்தில் ஆதாமோடு ஐக்கியம் கொண்டது போல் ஐக்கியம் கொள்ளுகிறோம், உறவாடுகிறோம். அவர் என்னை சிருஷ்டித்த தேவன். அவர் என்னில் அன்பு கூர்த்து எனக்காக தம்மை தாமே கல்வாரியில் ஒப்புக் கொடுத்த தேவன். அவர் இப்பொழுது எனக்குள் வாசம் செய்யும் தேவன். எபே 4 : 6 ன் கருத்தை நான் உங்களுக்கு இங்கே எழுதியுள்ளேன். அவர் எல்லார் மேலும், அவர் எல்லாரோடும், அவர் எல்லாருக்குள்ளும். இது அவரை மூவராக்கிவிடாது . அவர் ஒருவரே. அவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து.

56. முதலாவது திரித்துவம் என்ற ஒரு வார்த்தை வேதவாக்கியங்களில் எங்கும் காணப்படவே இல்லை. இரண்டாவது திரித்துவ வாசனையே வேதவாக்கியங்களில் எங்கும் இல்லை. மூன்றாவதாக திரித்துவம் எங்கும் கிறிஸ்துவின் அப்போஸ்தலர்களால் போதிக்கப்படவில்லை. நான்காவது இது ஒரே தேவன், இஸ்ரவேலே கேள், நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒரே கர்த்தர் (மாற் 12 : 30) என்ற வேதவாக்கிய போதனைக்கு மாறானது. பாருங்கள் வேதவாக்கியங்கள் இவ்வாறு கூறுகிறது : எனக்கு முன் ஏற்பட்ட தேவன் இல்லை. எனக்கு பின் இருப்பதும் இல்லை. நான், நானே கர்த்தர் ; என்னையல்லாமல் இரட்சகர் இல்லை (ஏசா. 43 : 10) நான் முந்தினவரும் நான் பிந்தினவரும் தானே, என்னை தவிர தேவன் இல்லை. (ஏசா 44 : 6 ). என்னை தவிர தேவன் உண்டோ? (ஏசா. 44 : 6) நானே கர்த்தர், வேறொருவர் இல்லை. என்னை தவிர தேவன் இல்லை (ஏசா 45 : 5, 18) கர்த்தரே தேவன் என்று அறியுங்கள் (சங் 100 : 3) நீதிபரரும் இரட்சகருமாகிய என்னையல்லாமல் வேறே தேவன் இல்லை : என்னை தவிர வேறொருவரும் இல்லை (ஏசா 45 : 21) நானே தேவன், வேறொருவரும் இல்லை (ஏசா 45 : 22,23) நானே தேவன், வேறொருவரும் இல்லை : நானே தேவன், எனக்கு சமானமில்லை (ஏசா 46 : 9) மூன்று தேவர்கள் சமநிலையில் இல்லை. என் மகிமையை நான் வேறொருக்கும் கொடேன். (ஏசா 48

: 11) தேவன் தன் மகிமையை மூவருக்குள் பங்கிட்டுக்கொள்ளவில்லை. நான் முந்தினவரும் நான் பிந்தினவரும் தானே (ஏசா 48 : 12) . பிதாவும் நான் தான் பரிசுத்த ஆவியும் நான் தான்.

57. ஐந்தாவது இது கி.பி 325 ல் நிசயாவின் ஆலோசனை சபையில் ரோமமார்க்கத்தினரால் கொள்கையாக ஆக்கப்பட்டது. அதுமுதல் இது ஸ்தாபன சபைகளால் பின்பற்றப்பட்டு வருகிறது. ஆறாவது திரித்துவ வழிபாடு ஒரு விக்கிரக ஆராதனை. மூன்று நபர்கள் என்றாலே அது ஒன்றுக்கு மேற்பட்ட அநேகரையே குறிக்கிறது. வழிபாட்டில் மூன்றுக்கும் மூவாயிரத்திற்கும் வித்தியாசம் இல்லை. எல்லாம் குட்டையில் ஊறிய மட்டைகள் தான். ஏழாவதாக திரித்துவ வழிபாடு புறமதஸ்தாரின் மார்க்கம். எட்டாவதாக இது ஏவாளை வஞ்சித்த சாத்தானுடைய சந்திரமான போதனை. மூன்று நபர்கள் என கூறி, ஆனாலும் மூவரும் ஒருவர் என்ற நயவஞ்சிப்பு. மூவர் என்றால் மூவர்தான். மூவர் எக்காலத்திலும் ஒருவராக முடியாது. ஒருவர் என்றால் அது தனிப்பட்ட ஒரு நபர் தான். அவர் மூவராக முடியாது. ஒன்பதாவதாக தேவத்துவம் சரீரப்பிரகாரமாக இயேசு கிறிஸ்துவுக்குள் பரிபூரணமாக வாசம் செய்வதால் (கொலோ 2 : 9) அவரே தேவன், அவரையன்றி வேறொருவரும் இல்லை.

58. நாம் எல்லாரும் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டிருக்கிறோம். ஒரே சரீரமும் ஒரே ஆவியும் உண்டு. C.S.I., C.P.M., A.G. E.C.I., Baptist, Luthern, போன்ற சரீரங்கள் கிடையாது. கிறிஸ்துவின் சரீரத்தில் இவைகளுக்கு இடம் இல்லை. இவைகள் அந்திக்கிறிஸ்துவின் சரீரத்தில் இடம்பெற்றுள்ள சபைகள். நமக்கோ ஒரே கர்த்தர் உண்டு. ஒரே விசுவாசம் உண்டு. ஒரே ஞானஸ்நானம் உண்டு. எல்லாருக்கும் ஒரே தேவனும் பிதாவும் உண்டு.அவர் (பிதா) எல்லார் மேலும், எல்லாரோடும் (குமாரன்) உங்கள் எல்லாருக்குள்ளும் (பரிசுத்த ஆவி) இருக்கிறவர். பாருங்கள் **அவர்** தான் **அவர்கள்** அல்ல. அவர் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியாக இருக்கிறார். தியானியுங்கள் எபே 4 : 4 -6. ஆம் அவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து. ஏனெனில் அவர்,இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராய் இருக்கிறார். (எபி 13 : 8) ஆம் கிறிஸ்துவே எல்லாரிலும் எல்லாமுமாய் இருக்கிறார் (கொலோ 3 : 11) Christ is all, and in all. ஏனென்றால் தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் (3 ல் ஒரு பங்கு அல்ல மாறாக நூறு சதவீதமும்) சரீரப்பிரகாரமாக கிறிஸ்துவுக்குள் வாசமாய் இருக்கிறது (கொலோ 2 : 9) அவர் மாம்சத்தில் வெளிப்பட்ட தேவன். (1 தீமோ 3 : 16). அவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து

59. செப்டம்பர் மாதம் 26-ம் தேதி காலை 8.30 மணியளவில் இரு யெகோவா சாட்சி வாலிப மற்றும் படித்த சகோதரர்கள் என் இல்லத்திற்கு எதிர்பாராத விதமாக வந்துவிட்டார்கள். அவர்கள் கிறிஸ்தவர்கள் என்றதால் வீட்டிற்குள் அனுமதித்தேன். அவர்கள் மற்றபடி யார் என்பதை காட்டிக்கொள்ளவில்லை. அவர்கள் பேச்சிலிருந்து அவர்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தை துஷிக்கும் சாத்தானுடைய கூட்டமாயிருக்கிற யெகோவா சாட்சி கூட்டத்தினர் என்பதை நான் புரிந்துக்கொண்டேன். அவர்கள் கிறிஸ்து தேவகுமாரன், அவர் சிருஷ்டிக்கப்பட்டவர். பிதா வேறு. குமாரன் வேறு என்று கூறி என்னிடம் யெகோவா சாட்சியின் ரீலை சுற்றிக்கொண்டிருந்தார்கள். நானும் அமைதியாக கேட்டுக்கொண்டிருந்தேன். முடிவில் நான் பேச ஆரம்பித்தபோது மூன்று காரியங்களை அவர்களிடம் பேசினேன். நீங்கள் கிறிஸ்து சிருஷ்டிக்கப்பட்டார் என கூறுகிறீர்கள். ஆனால் யோவான் தன் சுவிசேஷத்தில் (1 :10) அவர் உலகத்தில் இருந்தார், உலகம் அவரால் உண்டாயிற்று, உலகமோ அவரை அறியவில்லை என்கிறான். He was in the world. The world was made by him. The world knew him not. இதற்கு என்ன பதில் சொல்லுகிறீர்கள்? அன்று உலகம் அவரை அறியவில்லை. அன்று மட்டுமல்ல இன்று நீங்களும் அவரை அறியவில்லை என கூறினேன். அடுத்து இயேசு அடிக்கடி பிதா, பிதா என கூறுவது உண்டு. பிலிப்பு ஒரு நாள் அவரிடம் அந்த பிதா யார் நாங்கள் அவரை காணவேண்டும் என்றான். அதற்கு இயேசு பிலிப்புவே, இவ்வளவு காலம் சுமார் 3 1/2 ஆண்டுகள் நான் உங்களுடனே கூட இருந்தும் நீங்கள் என்னை அறியவில்லையா? என்னை கண்டவன் பிதாவை கண்டான் : அப்படியிருக்க, பிதாவை எங்களுக்கு காண்பியும் நீ எப்படி சொல்கிறாய்? என்னை அறிந்தீர்களானால் என் பிதாவையும் அறிந்திருப்பீர்கள் : இது முதல் நீங்கள் அவரை **அறிந்தும், கண்டும்** இருக்கிறீர்கள் என்றார். (யோ 14 : 7-9) என்றேன். ஆக பிதாவும் குமாரனும் ஒரே தேவனுடைய இரு உத்தியோகங்கள் என்றேன். அடுத்து தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டார் தேவதுவத்தின் பரிபூரணமெல்லாம் இயேசு கிறிஸ்துவுக்குள் வாசமாய் உள்ளது என கொலோ 2 : 9 ஐ சுட்டிக்காட்டினேன். தங்கள் பெட்டி படுக்கைகளை சுருட்டிக்கொண்டு வெளியே கிளம்பிவிட்டார்கள்.

60. பாருங்கள் அப்போஸ்தலர்கள் **கிறிஸ்து இயேசுவை கர்த்தர்** என்று பிரசங்கித்தார்கள் (2 கொரி 4 : 5) இந்த **கர்த்தர்** யார்? இவர் **கர்த்தர், கர்த்தர்** : இரக்கமும், கிருபையும், நீடியசாந்தமும், மகாதயையும், சத்தியமுள்ள தேவன். (யாத் 34 : 6). அதாவது பழைய ஏற்பாட்டின் யெகோவா. புதிய ஏற்பாட்டின் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து. தேவன் ஒருவரே. இதை தான் சங்கீதக்காரன் கர்த்தரே தேவன் என சங் 100 : 3 ல் கூறுகிறான். ஆம் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து. பிதா குமாரன் பரிசுத்த ஆவி மூன்று நபர்கள் அல்ல. அவர்கள் மூன்று பேர் என்பது சாத்தானின் வஞ்சிக்கும் உபதேசம். ஸ்தாபன சபைகளின் உபதேசம். இந்த உலகம் முழுவதும் பொல்லாங்கானுக்குள் கிடைக்கிறது என்பதை நான் அறிவேன். ஆம் திரித்துவ ஸ்தாபன சபைகள் யாவும் பொல்லாங்கானுக்குள் கிடைக்கிறது. அவர்களுக்கும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கும் எந்த விதமான சம்பந்தமும் கிடையாது. ஆனாலும் அவர்கள் உரிமை கொண்டாடுகிறார்கள். தங்களை தாங்களே வஞ்சித்து கொள்கிறார்கள். அவர்கள் தங்கள் உதடுகளினால்

அவரை கனம் பண்ணி தங்கள் இருதயத்தில் அவரை விட்டு வெகுதூரத்தில் உள்ளார்கள். இந்த செய்தி மூலமாக திரித்துவ ஸ்தாபன சபை மற்றும் அதன் ஊழியர்கள், விசுவாசிகள் அனைவரையும் விசேஷமாக Rev. S. பன்னீர்செல்வம் அவர்களையும் டாக்டர். புஷ்பராஜ் அவர்களையும், அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பி, பாவமன்னிப்புகென்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளும்படி கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் அழைக்கிறேன். ஏற்கனவே அவர்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் எடுத்திருப்பார்களானால், ஆதாயத்துக்காக அவர்கள் தற்போது சார்ந்துள்ள வேசி மார்க்கத்தைவிட்டு வெளியே வாருங்கள் என அழைக்கிறேன். கர்த்தர் உங்களை நேசிக்கிறார்.

61. ஆக திரித்துவ ஸ்தாபன சபை, ஊழியர்கள், விசுவாசிகள் முற்றிலும் தவறான ஒரு உபதேசத்தில் இருந்துக்கொண்டு தங்களை வீணாய் கிறிஸ்தவர்கள் என்று அழைத்துக்கொண்டு பெருமை பாராட்டி வருகிறார்கள். தேவனுடைய வார்த்தைக்கு திரும்பாமல், இது ஒரு பெரிய சபை, ஆவிக்குரிய சபை என்ற வீண் பேச்சில் பெருமை பாராட்டி உங்கள் ஆத்தும இரட்சிப்பை இழந்து போகாதீர்கள். திரித்துவ ஸ்தாபன சபைகள் யாவும் மிருகத்தின் முத்திரையை (வெளி 13 : 18) பெற்றுள்ளன. ஆதலால் தான் நான் எந்த சபைகளையும் சேர்ந்தவன் அல்ல. என்னுடைய ஐக்கியம் பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவோடும் இருக்கிறது (1 யோ 1 : 3) தம்முடைய குமாரனும் நம்முடைய கர்த்தருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவுடனே ஐக்கியமாய் இருக்கிறதற்கு என்னை அழைத்த தேவன் உண்மையுள்ளவர் . ஆமென்.

62. தேவன் தம்முடைய சபையை உண்டாக்கின போது அதை பெந்தெகொஸ்தே சபையாக உண்டாக்கினார். அது தான் முதல் சபை. பரிசுத்த ஆவியினால் பிறந்த ஒரு பெந்தெகொஸ்தே சபை. அந்த சபைக்கும் இந்நாள் உங்கள் மத்தியில் காணப்படும் த பெந்தெகொஸ்தே சபைக்கும் எந்த விதமான சம்மந்தமும் கிடையாது. அந்த பெந்தெகொஸ்தே சபையில் ஆண்களும், பெண்களும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டிருந்தார்கள். ஆனால் மனிதர்கள் அதை சும்மா விட்டுவைக்கவில்லை. அவர்கள் அதை கலப்பு செய்தனர். உலகத்தை அதனுடன் சேர்த்தார்கள். வேதசாஸ்திரம், லௌகிகஞானம் , ஸ்தாபனங்கள், பிரமாண்டமான கட்டிடங்கள், கல்வி கற்ற போதகர்கள், சிறந்த ஆடை அணிபவர்கள், அதில் தங்கள் பெயர்களை பதிவு செய்துக்கொண்டனர். அதன் விளைவாக அவர்கள் தேவனைவிட்டு அதிக தூரம் விலகிச் சென்றனர்.

63. தேவன் யாரையும் வேதாகம கல்லூரிக்கு அனுப்பவில்லை. அவர்கள் அபிஷேகம் பண்ணப்பட்ட கர்த்தருடைய ஊழியக்காரராக இருக்கும்படிக்கு, அவர்களை அவர் மேலறைக்கு அனுப்பி, அவர்கள் மேல் பரிசுத்த ஆவியை இறங்கப்பண்ணினார். ஆனால் மனுஷர்கள் வேதசாஸ்த்திரத்தை சபைக்குள் நுழைத்து அதை கலப்பு செய்தனர். D.Th., B. Th., M. Th., STM., B.D., D.D., போன்ற படிப்புகள் ஊழியக்காரர்களுக்கு தேவையில்லை. பரிசுத்த ஆவியின் அபிஷேகமே தேவை. இரட்சிப்புக்கு தங்கள் ஸ்தாபன சபைகளை (C.S.I., T.P.M. A.G. , E.Ci., Luthern, Baptist. போன்ற ஸ்தாபன சபைகள்) சார்ந்திருப்பவர்கள் நிச்சயமாக 100 சதவீதம் தங்கள் ஆத்தும இரட்சிப்பை இழந்து போவார்கள். நீங்கள் கிறிஸ்து இயேசுவின் மேல் கொண்டுள்ள தனிப்பட்ட விசுவாசமே உங்களை இரட்சிக்கிறது. ஆம், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தன் பாவங்களுக்காக மரித்தார், அடக்கம் பண்ணப்பட்டார், உயிர்த்தெழுந்தார் என்று விசுவாசிக்கிறவன் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளவேண்டும் (அப். 10 : 43, 2 : 38). ஏனென்றால் நாம் இரட்சிக்கப்படும்படிக்கு கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமமே அல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவில்லை. (அப். 4 : 13) கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள ஸ்தாபன சபைகள் உங்களை அனுமதிப்பதில்லை. உங்களை பரிதபிக்கப்படத்தக்க நிலையில் கொண்டுவைத்துள்ளது. நான் தவறு என்று கூற உங்களுக்கு உரிமை உண்டு. ஆனால் அப்படி கருதுவதற்கு முன் கர்த்தர் உங்கள் கரங்களில் கொடுத்துள்ள வேதவாக்கியங்கள் என்ன கூறுகிறது என்பதை ஆராய்ந்து பாருங்கள். பெரோயா பட்டனத்தார் வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்த்தார்கள். அதனால் நற்குணசாலிகள் என்று சாற்றிதழ் பெற்றனர். வேசித்தனம் செய்யும் ஸ்திரீகள் தங்கள் கணவனுக்கு உண்மையற்றவர்களாய் இருக்கிறார்கள். அது போலவே வேசித்தனம் செய்யும் உங்கள் ஸ்தாபன சபைகளும் தேவனுடைய வார்த்தையில் இல்லாததை போதித்து (திரித்துவம், பிதா குமாரன் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம், இராப்போஜனத்திற்கு பதிலாக பகல் போஜனம், கிறிஸ்துமஸ், லெந்து நாட்கள், ஈஸ்டர் பண்டிகைளை கொண்டாடுதல்) சபையை மாசுப்படுத்திவிட்டது.

64. ஸ்தாபனசபைகள் கிறிஸ்தவ மார்க்கம் என்னும் பெயரில் தழைத்தோங்கி, அதே சமயத்தில் தொடக்கத்தில் அப்போஸ்தலர்கள் போதித்த உபதேசங்களை மறைத்து, தங்கள் சபை போதனைகளை மக்களுக்கு கொடுத்து வருகிறது. ஸ்தாபன சபைகள் கொண்டுள்ள தீவிரமான திரித்துவ கருத்தின் காரணமாக அநேக ஆத்துமாக்கள் இரட்சிப்பின் அனுபவத்தை இழந்து மாறுபாடான பாதைகளிலும் கோணலான வழிகளிலும் நடந்துக்கொண்டிருக்கிறார்கள். பிரியமானவர்களே நீங்கள் சார்த்திருக்கும் ஸ்தாபன சபைகள் கூறுவதை விட்டு அகன்று, அதை விட்டு வெளியே வந்து, பரிசுத்த வேதாகமத்தை கையில் எடுத்து அதை தியானியுங்கள், தேவனுடைய வார்த்தையை விசுவாசியுங்கள். ஸ்தாபன சபைகள் தவறான உபதேசத்தை கொடுத்துக்கொண்டு, தங்களிடம் பரிசுத்த ஆவி உண்டு, அதனால் வழி நடத்தப்படுகிறோம் என்று எப்படி கூறமுடியும்? ஒருவன் தன்னிடம் பரிசுத்த ஆவி உண்டு என்று கூறிக்கொண்டு எப்படி ஸ்தாபன சபைகளில் ஈடுப்பாடு கொண்டிருக்க முடியும்? அது பரிசுத்த ஆவியை பெற்றவனால் கூடாது.

65. அப்போஸ்தலருடைய நடபடிகள் மற்றும் அதனை தொடர்ந்து பின் வரும் நிருபங்கள், மற்றும் இயேசு கிறிஸ்துவை பற்றிய வெளிபாடு இவைகள் யாவும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்ற விசுவாசிகளுக்கு எழுதப்பட்டுள்ளது. ஸ்தாபன சபைகளுக்கும், பிதாகுமாரன் பரிசுத்த ஆவி என உச்சரித்து ஞானஸ்நானம் பெற்றவர்களுக்காக எழுதப்படவில்லை. அவர்களுக்கென்று எழுதப்படாததால் தான் அவர்கள் போதனைகள், உபதேசங்கள் யாவும் அதற்கு மாறாக இருக்கிறது. அவர்களால் அதை அறிந்துக்கொள்ள முடியவில்லை. அது அவர்களுக்கு மறைபொருளாக இருக்கிறது.

**ஒரே தேவன் தத்துவத்தை நம்புவோமாகில், ஒரு பெரிய கொள்கை குழப்பம் காத்திருக்கிறது - யாருக்கு? Rev. S. பன்னீர்செல்வம் மற்றும் டாக்டர். புஷ்பராஜ் அவர்களுக்குத் தான்.**

66. **இயேசுவின் பிறப்பு :** இயேசு பிறந்தார் (மத். 1 : 25). அவர் யார்? இம்மானுவேல். இதற்கு தேவன் நம்மோடிருக்கிறார் என்று அர்த்தம் (மத் 1 : 23) தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டார். (1 தீமோ 3 : 16) இது தேவபக்திக்குரிய இரகசியம். தேவன் யார்? தேவன் ஒரு ஆவி (யோ 4 : 24) நித்திய ஆவியாக இருந்த தேவன் தம்மை மாம்சத்தில் வெளிப்படுத்தினார்.
**மரணம் :** இயேசு மறுபடியும் மகா சத்தமாய் கூப்பிட்டு, ஆவியை விட்டார் (மத் 27 : 50)
**அடக்கம் :** யோசேப்பு இயேசுவின் சரீரத்தை எடுத்து, துய்யதான மெல்லிய துப்பட்டியிலே சுற்றி தனக்காக கன்மலையில் வெட்டியிருந்த தன்னுடைய புதிய கல்லரையிலே அவரை வைத்து, கல்லரையின் வாசலில் ஒரு பெரிய கல்லை புரட்டி வைத்து போனான். (மத் 27 : 59, 60)
**உயிர்த்தெழுதல் :** வாரத்தின் முதலாம் நாள் காலையில் அதிக இருட்டோடே, மகதலேனா மரியாள் கல்லறையினிடத்திற்கு வந்து கல்லறையை அடைத்திருந்த கல் எடுத்துப்போட்டிருக்க கண்டாள் (யோ 20 : 1) அவர்கள் கல்லறைக்குள் பிரவேசித்து வெள்ளை அங்கி தரித்தவனாய் வலது பக்கத்தில் உட்கார்ந்திருந்த ஒரு வாலிபனை கண்டு பயந்தார்கள். அவர் அவர்களை நோக்கி : பயப்படாதிருங்கள். அவர் உயிர்த்தெழுந்தார். அவர் இங்கே இல்லை. இதோ அவரை வைத்த இடம் என்றான் (மாற். 16 : 5,6)

67. இப்பொழுது கவனியுங்கள். இயேசு மரிக்கும் முன்பு தமது ஆவியை அவர் பிதாவின் கைகளில் ஒப்புவித்தார். இயேசு : பிதாவே, உம்முடைய கைகளில் என்னுடைய ஆவியை ஒப்பு விக்கிறேன் என்று மகா சத்தமாய் கூப்பிட்டு சொன்னார் : இப்படி சொல்லி, ஜீவனை விட்டார் (லூக் 23 : 46) மரிக்கும் முன்பே தம்முடைய ஆவியை பிதாவின் கரங்களில் ஒப்புக்கொடுத்தார். அதாவது தம்முடைய ஆவியை பிதாவின் கரங்களில் ஒப்புக்கொடுத்து பின்மரித்தார்.

68. இயேசு மரித்தபோது அவருடைய சரீரம் கல்லறைக்கு சென்றது. வேதவாக்கியங்கள் நிறைவேறும்வரைக்கும் இயேசு உயிரோடெழும்பாதபடி தடைசெய்யப்பட்டார். அவர் உயிரோடெழும்ப முடியவில்லை. ஏனெற்றால் அவருடைய சரீரம் இரவும் பகலும் மூன்று நாட்களாக கல்லறையில் இருக்கவேண்டியதிருந்தது. யோனா இரவும் பகலும் மூன்று நாள் ஒரு பெரிய மீன் வயிற்றில் இருந்தது போல மனுஷகுமாரனும் இரவும் பகலும் மூன்று நாள் பூமியின் இருதயத்தில் இருப்பார். (மத் 12 : 40 )

69. இப்பொழுது அவருடைய ஆத்துமா பாதாளத்திற்கு சென்று, நீதியை பிரசங்கித்தவனாகிய நோவாவின் நாட்களில் மனந்திரும்பாத காவலில் உள்ள ஆவிகளுக்கு பரிசுத்த ஆவியினாலே பிரசங்கம் செய்தார் (1பேதுரு 1 : 12, 3 : 18, 19,20).

70. இப்பொழுது நன்கு கவனியுங்கள். வேதவாக்கியம் நிறைவேறின பின்பு அந்த தடை நீக்கப்பட்டு, அவருடைய ஆவி அவருடைய ஆத்துமாவுக்குள் இறங்கியது, அவருடைய ஆவியும், ஆத்துமாவும் சேர்ந்து சரீரத்திற்குள் இறங்கினது. அவர் உயிர்த்தெழுந்தார். யூத இராஜசிங்கம் உயிர்த்தெழுந்தார்.

71. இயேசு மரித்தபோது பரலோகத்தில் இந்த அண்டசராசரத்தை ஆளுகை செய்ய தேவனுடைய ஆவி இருந்தது. ஏனென்றால் தேவன் ஒரு ஆவி. (யோ 4 : 24) இயேசு கப்பர் நகூமில் இருந்தார் (மத் 17 : 24). அங்கு அவர் கூறியதை கவனியுங்கள். இரண்டு பேராவது, மூன்று பேராவது என் நாமத்தினாலே (கர்த்தராகிய இயேசு கிறிஸ்து) எங்கே (அது பெத்லெகேம் ஆக இருக்கலாம், அது தமஸ்கு ஆக இருக்கலாம், அது செசரியாவாக இருக்கலாம், அது Rev. S. பன்னீர்செல்வம் மற்றும் டாக்டர். புஷ்பராஜ் அவர்களின் ஊராகவும் இருக்கலாம், அல்லது உலகில் எந்த பகுதியாகவும் இருக்கலாம்) கூடியிருக்கிறார்களே, அங்கே அவர்களின் நடுவிலே இருக்கிறேன் என்கிறார் (மத் 18 : 20) பாருங்கள் அவர் தன் சரீரத்தில் கப்பர் நகூமில் இருந்தாலும், தன் ஆவியில் அவர் உலகில் எந்த பகுதியிலும் இருக்கமுடியும். அதே நேரத்தில் அவர் பரலோகத்திலும் இருக்கமுடியும். பாருங்கள் ஒரே நேரத்தில் அவர் ஒரு இடத்தில் மாம்சத்திலும், அதே வேளையில் பூமி மற்றும் பரலோகத்தில் ஆவியாகவும் இருக்க முடிந்தது. ஆதலால் தற்பொழுது மனுஷகுமாரன் ஊழியம் முடிவு பெற்றதால் அவர் இனி ஆவியில் மாத்திரமே பிரசன்னராக இருக்கமுடியும். பாருங்கள் இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்கிறார் (மத் 28 : 20) உங்களுடனே கூட எப்படி? மாம்சசரீரத்திலா? இல்லை. ஆம், தம்முடைய ஆவியில். அதாவது பரிசுத்த ஆவியில். (யோ 14 : 17, 20) அவர் வானத்தையும் பூமியையும் நிரப்புகிறவர் (எரே 23 : 23, 1 இரா8 : 27) பாருங்கள் சங்கீதக்காரன்இவ்வண்ணமாக கூறுகிறான். நான் வானத்திற்கு ஏறினாலும் நீர் அங்கே இருக்கிறீர் : நான் பாதாளத்தில் படுக்கைப்போட்டாலும், நீர் அங்கேயும் இருக்கிறீர் (சங் 139 : 7-13). அதென்ன? அவர் பரிசுத்த

ஆவியினால் எங்கும் பிரசன்னராக இருக்கிறார்.

72. பிரியமானவர்களே ஆதலால் ஒரே தேவன் விசுவாசத்தில் குழப்பம் எதுவுமில்லை. நம்முடைய தேவன் குழப்பத்தின் தேவனும் இல்லை. Rev. S. பன்னீர் செல்வமும் மற்றும் டாக்டர். புஷ்பராஜ் அவர்களும் தான் குழப்பவாதிகள்.

73. இயேசுவின் மரணத்திற்கு பிறகு, பூமியை அந்தகாரம் சூழ்ந்தது. அவரை கல்லறையில் வைத்தார்கள். இரவும் பகலும் மூன்று நாட்கள் அவர் பாதாளத்தில் இருந்தார். அதன் பின் யெகோவா தேவன் கல்லறையை விட்டு வெளியே வந்தார். அவர் வாசம் செய்யும் ஸ்தானத்திற்கு அதாவது உன்னதத்திற்கு ஏறினார். பாருங்கள் பரலோகத்திலிருந்து இறங்கினவரும் பரலோகத்தில் அதே நேரத்தில் இருக்கிறவருமான மனுஷகுமாரன் என யோவான் 3 : 13 ல் தியானிக்கிறோம். ஆம், உயர வானத்திலும் தாழ பூமியிலும் கர்த்தரே தேவன். அவரை தவிர ஒருவரும் இல்லை (உபா 4 : 39) அவருடைய நாமம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து. பின் யெகோவா தேவன் தம்முடைய சுய இரத்தினால் சம்பாதித்த சபையின் மத்தியில் தங்குவதற்கு திரும்பவும் வந்தார். அதாவது யெகோவா தேவன் தம்முடைய மகிமைக்கென்று சிருஷ்டித்த மனுக்குல மக்களுக்குள் வாசம் பண்ண இரண்டாம் முறை வந்தார். அதாவது யெகோவா தேவன் மாம்சத்தில் இயேசுவாக வெளிப்பட்டு, இப்பொழுது மாம்சத்தின் மூலமாய் பரிசுத்த ஆவியாக வெளிப்படுகிறார். யெகோவா தேவன் திரும்பவும் வந்து, சபையின் மத்தியில் உலாவி, பிணியாளிகளை சொஸ்தப்படுத்துகிறார். மரித்தோரை எழுப்புகிறார். தம்முடைய ஆவியினால் தம்மை வெளிப்படுத்திக்கொண்டிருக்கிறார்.

74. மேலும் Rev. S. பன்னீர் செல்வம் அவர்களின் வகையறாக்கள் ஏசா 33 : 22 ஐயும் ஆதாரமாகக் கொண்டு இங்கும் திரியேக தேவனைப்பற்றி கூறப்பட்டிருக்கிறது என்கிறார்கள். ஏசா 33 : 22 என்ன கூறுகிறது? கர்த்தர் நம்முடைய நியாயதிபதி. கர்த்தர் நம்முடைய நியாயப் பிரமாணிகர். கர்த்தர் நம்முடைய இராஜா. அவர் நம்மை இரட்சிப்பார். பாருங்கள், இதில் திரித்துவம் அடங்கியிருக்கின்றதாம். பிதாவும் கர்த்தராம், குமாரனும் கர்த்தராம், பரிசுத்த ஆவியும் கர்த்தராம். மூன்று கர்த்தாக்கள் மூன்று பணிகளில் காணப்படுகின்றனர். ஆனாலும் முடிவில் **அவர்** என்று கூறப்பட்டிருப்பதால் மூவரும் சேர்ந்து ஒருவர் என்கிறார்கள். கர்த்தர் நியாயாதிபதி. நம்முடைய நியாயாதிபதி யார்? அப்.பவுல் தீமோத்தேயுவுக்கு தனது இரண்டாம் நிருபம் நாலாவது அதிகாரம் முதலாம் வசனத்தில் உயிரோடிருக்கிறவர்களையும், மரித்தவர்களையும் நியாயந்தீர்க்கப்போகிறவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்கிறான். ஆம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே நம்முடைய நியாயாதிபதி, நியாயப்பிரமாணிகர்

75. கர்த்தர் நியாயப்பிரமாணிகர். நியாயப்பிரமாணத்தை கட்டளையிடுகிறவர் (அதாவது நியாயப்பிரமாணிகர்) ஒருவரே. அவரே இரட்சிக்கவும் அழிக்கவும் வல்லவர் (யாக் 4 : 12) There is one law giver, who is able to save and to destroy. இயேசு கிறிஸ்து நியாயப்பிரமாணிகர். ஆதலால் அவர் தன் சட்டத்தை மிகைப்படுத்துகிறார். பாருங்கள் விபசாரம் செய்யாதிருப்பாயாக என்பது பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள். **நான் உங்களுக்கு சொல்கிறேன்,** ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடு விபசாரம் செய்தாயிற்று (மத் 5 : 27,28) மேலும் ஒரு உதாரணம் தருகிறேன். தன் மனைவியை தள்ளிவிடுகிற எவனும் தள்ளுதல் சீட்டை அவளுக்கு கொடுக்ககடவன் என்று உரைக்கப்பட்டது. **நான் உங்களுக்கு சொல்லுகிறேன்** வேசித்தன முகாந்திரத்தினால் ஒழிய தன் மனைவியை தள்ளிவிடுகிறவன் : அவளை விபசாரம் செய்ய பண்ணிகிறவனாய் இருப்பான் : அப்படி தள்ளிவிடப்பட்டவளை விவாகம் பண்ணுகிறவனும் விபசாரம் செய்கிறவனாய் இருப்பான் (மத் 5 : 31, 32)

76. கர்த்தருடைய ஆவி எங்கோ அங்கே விடுதலை உண்டு (2 கொரி 3 : 17) அப்படியானால் கர்த்தருடைய ஆவி (பரிசுத்த ஆவி) எங்கு இல்லையோ அங்கு விடுதலை இல்லை. அதாவது அங்கு அழிவு. எங்கு கர்த்தருடைய ஆவி உள்ளதோ அங்கு விடுதலை அதாவது அங்கு இரட்சிப்பு.

77. கர்த்தர் நம்முடைய ராஜா. அவர் யார்? தாவீதின் குமாரன் / இஸ்ரவேலின் ராஜா. இது கர்த்தர், தாவீதின் குமாரனாக ஆயிரம் வருடங்கள் அரசாட்சி செய்வதை குறிக்கிறது. தாவீதின் சிங்காசனத்தில் தாவீதின் குமாரனாக இருந்து ஆயிரம் வருடங்கள் அரசாட்சி செய்வார். தேவகுமாரனாக தன்னை வெளிப்படுத்திய தேவன், மனுஷகுமாரனாக தன்னை வெளிப்படுத்திய தேவன், இனி தாவீதின் சிங்காசனத்தில் தாவீதின் குமாரனாக தன்னை வெளிப்படுத்த போகிறார்.

78. நாம் வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்க்கும் போது மூன்று கர்த்தர்கள் இருந்ததாக ஆதாரங்கள் எங்கும் இல்லை. மாறாக ஒரே கர்த்தர் உண்டு என காண்கிறோம் (எபே 4 : 5) அவர் ஆவியானவர் (2 கொரி 3 : 17). இவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து அல்லாமல் வேறுயாரும் இல்லை.

79. எரேமியா 7 : 4 ல் கர்த்தரின் ஆலயம் என மூன்று முறை வருகிறது. அதைக்கொண்டு தேவத்துவம் திரித்துவத்தில் இருக்கிறது என கூறமுடியாது.

80. அரண்டவனுக்கு இருண்டதெல்லாம் பேய் என்ற ஒரு பழமொழி உண்டு. அதே போல் பரிசுத்த வேதாகமத்தில் ஏதாவது ஒரு சொல் மூன்று தடவைகள் தொடர்ந்து கூறப்பட்டுவிட்டால் போதும், உடனே அது

திரித்துவம் என்று ஸ்தாபன சபைகள் கூறி வருகிறது. மேலும் சில உதாரணங்களை கவனிப்போம். வெளி 4 : 8க்கு வாருங்கள். இங்கு கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர் என மூன்று முறை வருவதால் தேவத்துவத்தில் மூன்று நபர்கள் உண்டு என்று கூறுகிறார்கள். நான்கு ஜீவன்கள் இருந்தவரும், இருக்கிறவரும், வருகிறவருமாகிய சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர் என்று இரவும் பகலும் ஓய்வில்லாமல் சொல்லிக்கொண்டிருந்தன என காண்கிறோம். இந்த இருக்கிறவரும், இருந்தவரும், வருகிறவருமாகிய சர்வ வல்லமையுள்ள தேவன் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்பதை முந்திய பகுதிகளில் கண்டோம் (வெளி 1 : 8) ஆக இந்த ஜீவன்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர் என சொல்லி அவருக்கு மகிமையையும், கனத்தையும், ஸ்தோத்திரத்தையும் செலுத்தினர். பிதா பரிசுத்தர், குமாரன் பரிசுத்தர், பரிசுத்த ஆவி பரிசுத்தர் என சொல்லி மூன்று தேவர்களை மகிமைப்படுத்தவில்லை அவ்வாறாக கருதுகிறவர்கள், மக்களை கருத வைக்கிறவர்கள் உலகம் அனைத்தையும் மோசம் போக்குகிற பிசாசின் கூட்டத்தாரே.

81. யாத் 34 : 6 க்கு வந்தால் அங்கு கர்த்தர் தம்மை : **கர்த்தர், கர்த்தர்** : இரக்கமும் கிருபையும் நீடிய சாந்தமும், மகா தயையும் சத்தியமுள்ள தேவன் என்கிறார். இங்கு **கர்த்தர், கர்த்தர்** என இருமுறை வருவதால் சத்தியமுள்ள தேவன் இருவர், அவர் பிதாவும் அவர் குமாரனும் என்று கூற முடியுமா? முடியாது என்பது என் கருத்து. இதை இருத்துவத்திற்கு எடுத்துக்காட்டாக எடுத்துக்கொள்ள முடியுமா? முடியாது.

82. மத் 7 : 21, 22 வசனங்களை தொடர்ந்து **கர்த்தாவே கர்த்தாவே** என கூறப்பட்டுள்ளது இதைக்கொண்டு தேவத்துவத்தில் இருவர் அவர்கள் முறையே பிதா மற்றும் குமாரன் என்று கூறமுடியுமா? இதுவும் முடியாது.

83. அடுத்து சங் 118 : 25 வது வசனத்தில் கர்த்தாவே இரட்சியும், கர்த்தாவே காரியத்தை வாய்க்கப்பண்ணும் என தாவீது சங்கீதம் பாடுகிறான். இவன் என்ன? பிதாவிடம் இரட்சிப்பையும், குமாரனிடம் காரிய சித்தியையும் கேட்டு விண்ணப்பம் பண்ணுகிறானா? இல்லையே. ஒரே கர்த்தர் உண்டு. அவன் அவரிடமே தன் விண்ணப்பத்தை ஏறெடுகிறான்.

84. இயேசு கிறிஸ்து : இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும், அதாவது அநுதினமும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்கிறார் (மத் 28 : 20) அதாவது நமது ஆயுசு நாட்களில், அநுதினமும் நம்முடனே கூட இருக்கிறேன் என்கிறார். நாம் தரை வழியாக நடந்தாலும் சரி, ஆகாய மார்க்கத்தில் பறந்தாலும் சரி, கடல் வழியாக பிரயாணம் செய்தாலும் சரி அவர் நம்முடனே கூட அநுதினமும் இருக்கிறார். பிதா தரைவழியாக நம்மை பாதுகாக்க, குமாரன் வான் வழியாக நம்மை பாதுகாக்க, பரிசுத்து ஆவி நம்மை கடல் பிரயாணத்தில் பாதுகாக்க வருகிறார்கள் என்று தேவ ஆவியினால் அருளப்பட்ட வேதவாக்கியங்களில் எங்கும் கூறப்படவில்லை. இதெல்லாம் Rev. S. பன்னீர் செல்வம் அவர்களின் சொந்த சரக்கு, சாக்கடை சரக்கு. நம்முடைய அனைத்து வழிகளிலும் இயேசு கிறிஸ்து நம்மோடிருந்து நம்மை காக்க வாக்கு கொடுத்திருக்கிறார்.

85. பாருங்கள், வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தர் இடத்திலிருந்து எனக்கு ஒத்தாசை வரும். கர்த்தர் உன் போக்கையும், உன் வரத்தையும் இதுமுதற்கொண்டு என்றென்றைக்கும் காப்பார் என்று சங். 121 : 2, 8 வசனங்களில் தியானிக்கிறோம். ஆக கர்த்தராகிய இயேசு கிறிஸ்து எல்லாவற்றிலும் எல்லாமுமாயிருந்து (பிதாவாகவும், குமாரனாகவும், பரிசுத்த ஆவியாகவும் இருந்து ) நம்மை அநுதினமும் எல்லா திமைக்கும் விலக்கி காக்கிறார் என்ற மேலான விசுவாசத்தோடு நாம் நம்முடைய பிரயாணத்தில் முன்னேறிச் செல்லுவோம். என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி, அல்லேலூயா.!

86. **Some hints about Trinity :**

1. Trinity - Where was it ever called in the Bible?
2. Trinity - There is no such persons like First Person, Second Person & Third Person in the God Head.
3. Trinitarian - Believes in Three Gods.
4. Trinity - is of the Satan.
5. Trinity - is of the Devil.
6. Trinity - is False.
7. Trinity - is Heathenism.
8. Trinity - is Paganism.
9. Trinity - doctrine is against the Truth.
10. Trinity - has no single Scripture reference.
11. Trinity - has no place in the Bible.
12. Trinity - is not mentioned in the Bible.
13. Trinity - is not taught in the Bible.
14. Trinity - is not written in the Bible.
15. Trinity - no such a word in the Bible.
16. Trinity - is a man made Scheme.
17. Trinity - is the dogma of the great harlot, the Roman Catholic Church.

87. **Think and Act on God Head:**
1. God Head is not in Trinity.
2. Fullness of God Head is in Christ.
3. He is the True God and Eternal Life.
4. There is no other God beside him, before him, after him, above him, below him.
5. God works in Trinity.

88. வேதவாக்கியங்களின் அடிப்படையில் நான் வேதவாக்கியங்களுக்கு புறம்பாக / மாறாக போதிக்கப்படும் உபதேசங்களை கடிந்துக்கொண்டு, கண்டனம் பண்ணி, சத்தியத்தை உங்களுக்கு சத்தியத்தின்படி கொண்டுவர வேண்டிய ஊழியத்தில் உள்ளேன். ஆனால் யாரையும் கடிந்துக்கொள்ள வேண்டும் என்பது எனது சுயவிரும்பம் இல்லை. எனக்கு தனிப்பட்ட முறையில் வெறுப்பு கிடையாது. நான் யார் மீதும் வெறுப்பு கொள்வேனாயின் என்னிடம் நிச்சயமாக தேவனுடைய ஆவி தங்காது, கிரியை செய்யாது. நான் இங்கு Rev. S. பன்னீர் செல்வம் மற்றும் டாக்டர் புஷ்பராஜ் அவர்கள் உபதேசத்தையே கடிந்துக்கொள்கிறேன். என் உள்ளத்தில் அவர்கள் மீது வெறுப்பு கிடையாது. நான் அவர்களை நேசிக்கிறேன். கர்த்தர் அவர்கள் மனக்கண்களை திறக்கவேண்டும். அதற்காக ஜெபிக்கிறேன். சிலர் தங்களை கிறிஸ்தவர்கள் என்று அழைத்துக்கொண்டு என்னை மிரட்டுவது இன்னும் ஓயவில்லை. எனக்கு விரோதமாக ஒரு பாளையமே இறங்கினாலும், என் இருதயம் பயப்படாது. ஆனால் அப்படிப்பட்ட காரியங்கள் ஒரு கிறிஸ்தவனுக்கு அழகு அல்ல. தேவன் என் உள்ளத்தில் எதை எழுத என் கரத்தில் உள்ள பேனாவை நகர்த்திக்கொண்டு செல்கிறாரோ அதையே எழுதுகிறேன். அப்படி எழுதுவதால் அநேக வேளைகளில் அநேக நண்பர்களை இழந்து விடுகிறேன். அதற்காக நான் ஒன்றும் செய்யமுடியாத நிலையில் உள்ளேன். நான் வேதவாக்கியங்களையும், இக்காலத்திற்குரிய தீர்க்கதரிசியின் செய்திகளையும் தியானிக்கிறேன். இரண்டையும் ஒன்று சேர்த்து ஆவியானவர் வழிநடத்துகின்றபடி அதை ஒருசெய்தியாக நான் உங்களுக்கு கொண்டு வருகிறேன்.

89. முடிவாக 2 கொரி 13 : 14 ல் கூறப்பட்டுள்ள ஆசீர்வாதத்திற்கும், எண் 6 : 22 - 27 ல் கூறப்பட்டுள்ள ஆசீர்வாதத்திற்கும் எந்த விதமான சம்பந்தமும் கிடையாது. இரண்டும் ஒன்றுக்கொன்று வித்தியாசப்பட்ட ஆசீர்வாதங்கள். அதில் திரித்துவம் என்ற தெய்வீகத் தத்துவம் கிடையாது. மேலும் அது பிதா குமாரன் பரிசுத்த ஆவியாக மூவரின் ஒட்டு மொத்த ஆசீர்வாதங்களை கொண்டுள்ளதாகவும் இல்லை. ஒரே தேவனின் ஆசீர்வாதமே அடங்கியுள்ளது. வானத்தையும், பூமியையும் உண்டாக்கின கர்த்தர் உங்கள் போக்கையும் வரத்தையும் இது முதற்கொண்டு என்றென்றைக்கும் காப்பார். அதோடு மட்டுமல்ல உங்கள் ஆத்துமாவையும் காப்பார்.

90. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும் உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென்.

ஆகஸ்ட் - அக்டோபர் / 2009

கிறிஸ்துவின் அன்பில்
**சகோ. காலேப் யோசுவா**

## என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி.
## கர்த்தர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே.

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் எனது இரண்டாவது மகன் இம்மானுவேல் ஒண்டர்புல் திருமணம் குமரி மாவட்டம், குலசேகரம் அருகில் உள்ள, அரமன்னம் என்ற கிராமத்தில் உள்ள கல்வாரி பாப்திஸ்ட் பவுண்டேஷன் சபையில் 14.08.2009 அன்று காலை நடந்தது. மணமகள் மேற்கூறிய சபையின் பாஸ்டரது மூத்த மகள் சகோதரி. கார்ட்லின் ரேச்சல். திருமண ஆராதனையை நான் நடத்தி வைத்தேன். திருமணம் சீரும், சிறப்புமாக நடைபெற்றது. வரவேற்பு நிகழ்ச்சிகளை பாளையங்கோட்டை பாஸ்டர். ஸ்டீபன், மதுரை பாஸ்டர். அருள்செல்வன், குடியாத்தம் பாஸ்டர். ஜான்பால் கவனித்துக்கொண்டார்கள் மனநிறைவுடன் சென்னையிலிருந்து புறப்பட்டு சென்றோம். திருமணத்தை முடித்து மீண்டும் மனநிறைவுடன் சென்னை வந்து சேர்ந்தோம். கர்த்தர் எங்களுடைய போக்கையும் வரத்தையும் காத்துக்கொண்டார். கர்த்தருடைய பரிசுத்த நாமத்திற்கு ஸ்தோத்திரம். திருமணத்திற்கு வருகை தந்த ஊழியர்கள், விசுவாசிகள், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் என்னுடைய மற்றும் என் குடும்பத்தாருடைய நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். இந்நாட்களில் தேவனுடைய மந்தையில் மூன்று ஆடுகள் வந்து சேர்ந்தது. எனது மருமகள், எனது இளைய மகள் மற்றும் எனது மகளின் கல்லூரி தோழி ஒருவர். ஆக மூன்று பேர்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றார்கள். இவர்கள் தேவனுடைய அன்பினாலும், கர்த்தருடைய கிருபையினாலும் இலவசமாக பெற்ற ஆத்தும இரட்சிப்பை காத்துக்கொள்ள, தேவனைப்பற்றும் நல்மனச்சாட்சியின் உடன்படிக்கையை காத்துக்கொள்ள, கிறிஸ்துவை அறிகிற அறிவில் இன்னும் வளர இவர்களை உங்கள் ஜெபங்களில் மறவாதீர்கள்.

**சகோ. காலேப் யோசுவா**